ஆஸாத்

சாந்தி மலர்.

8–1–51

AZAD

THE ONLY POLITICAL TAMIL FORTNIGHTLY
KUMBAKONAM

FOUNDER: HAJEE - M. ABDUR RAHMAN SAHIB
EDITOR: MAULANA ABDUL HAKEEM

பொருள் அடக்கம்.

டாக்டர். சையது மஹமூத்
ஹிமாசலம் சரிந்தது.
திரு. நபி ஜெனன விழா.
பொங்கல் வாழ்த்து.
செய்திகள்.

இதழ் 11.

குறைந்த விலையில் அழகிய ஆடைகள்

Truthful READY MADE CLOTHES

"ட்ருத்புல்" ஆடைகளே!

எங்கள் எம்பிராய்டரி வேலைப்பாடுகள்
ஒரு தனி ரகம்.
சகோதர சகோதரிகள் யாவரும் ஒரு முறை
வாங்கி அணிந்து ஆனந்தம் அடைய
வேண்டுகிறோம்
இந்தியாவெங்கும் ஒரே விலைக்கு
விற்கப்படுகிறது.

தயாரிப்பவர்கள்.
தி ட்ருத்புல் மனுபாக்சரிங்
...லிமிடெட், மதுரை.

'AZAD' NATIONAL TAMIL BI-MONTHLY
KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய
மாதமிருமுறை பத்திரிகை
கும்பகோணம்.

மலர் 3	விக்ருதுஹூ மார்கழிமீ 24உ (8-1-1951) ஹிஜிரி 1370 ரபீஉல் அவ்வல்மீ 29உ திங்கட்கிழமை	இதழ் 11

இந்தியா — பாக். கூட்டு பாதுகாப்பு.

(டாக்டர். சையித் மஹ்மூத் அமைச்சர், பீஹார்.)

சென்ற ஆண்டு இந்து—முஸ்லிம் ஒற்றுமை சரித்திர காலம் முதல் வளர்ந்து வரும் கூட்டுக் கலாச்சாரம் முதலியவற்றை விவரித்து ஓர் நீண்ட கட்டுரை கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை வேண்டுகோளுக்கிணங்க பிரசுரித்திருந்தேன். மற்ற விஷயங்களுடன் இந்தியா—பாக். உறவு பாதுகாப்பு, முதலியவை பலம் பெற இரு நாடுகளும் கூட்டுப் பாதுகாப்புக் கொள்கையை கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்தியிருந்தேன் அவ்விஷயம் சம்பந்தப்பட்ட கட்டுரைகள் யாவும் புத்தக ரூபமாய் வெளியிடப்பட்டபோது மேற்கூறிய விஷயத்தை இன்னும் சற்று தெளிவாய் விவரித்திருந்தேன். இந்தியா—பாக் இரு நாடுகளிலும் அக்கட்டுரைகள் பெரிதும் வரவேற்கப்பட்டன ஆனால் துரதிருஷ்டவசமாக இரு நாடுகளிலும் பல துக்ககரமான சம்பவங்களுக்கும் பல்லாயிர படுகொலைகளுக்கும், ஒரு பாவமுமறியாத மக்களின் அநேக தொல்லைகளுக்கும் காரணமான அவநம்பிக்கை என் கட்டுரைகள் வளர்த்த நல்லெண்ண மனப்பான்மையையும் பாதிக்கவாரம்பித்துவிட்டது.

ஆனால் சமீபத்தில் இந்தியா—பாக். பிரதமர்கள் செய்துகொண்ட ஒப்பந்தம், ஓர் புது அத்தியாயத்தை தொடங்கிவிட்டது. சம்பவங்களை ஆராய்ந்தால் பல முக்கிய விஷயங்களில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதென்றே தோன்றுகிறது இரு வங்காள பிரச்னையை மட்டும் சீர்படுத்தும் வகையிலன்றி இவ்வுடன்பாடு பல்வித பிரச்னைகளுக்கும்பரிகாரம் காணத்தக்க பரந்த நோக்கங்கொண்டதே என்ற நம்பிக்கை வலுக்கிறது. ஆகவே இருநாட்டு மக்களின் துன்பங்களுக்கும் நிரந்தரமாய் முடிவு ஏற்படக்கூடும். அவநம்பிக்கை நாற்புறமும் சூழ, மோசமடைந்துவரும் சூழ்நிலையில் அபாயகரமான மூன்றும் மார்க்கம் ஒன்றை பின்பற்ற முற்பட்டது பண்டித நேருவின் துணிகரம் மிக்க வீரச்செயலே நிலைமையின் பலாபலனை முற்கூட்டி அறிந்துகொள்ளும் ஆற்றல்மிக்க லியாகத் அலிகான், பண்டித நேருவின் நேசபாவ கரத்தைப் பிடித்து தோழமைகொண்ட விவேகம் காட்டியதற்காக நம் பாராட்டுதலுக்கு உரியவரென்பதில் எள்ளளவு சந்தேகமுமில்லை. ஆகவே இருபுறத்திலும் விவேகமும் ஆற்றலும் சாதாரண ச பவங்களின் நம் வருங்கால நிலைமையை ஊகித்தறியும் சக்திமிக்க தலைவர்கள் உண்டு என்பது நிச்சயமாகிறது. இத்தகைய தலைவர்களிட இருநாட்டு மக்களின் கதிமோட்சமிருப்பதால் சமீபத்தில் இந்தியா—பாக். இடையே நல்லுறவு நிலவி சுமுகமான சூழ்நிலையில் இருபுறத்து மக்களும் முன்னேற நிச்சயம் கிடைத்தேதீரும் என்று நம்பலாம்.

அடிக்கடி தோன்றி நம் அரசியல் உடலை பலம் இழக்கச் செய்யும் நோய்களை ஆராய்ந்தறியும் காலம் வந்துவிட்டது. நாட்டுப் பிரிவினை நியாயமானதா என்பதை ஆராயும் காலம் மலையேறிவிட்டது இன்று பிரிவினை மறுக்கமுடியாத உண்மையாகிவிட்டது. ஆகவேநாம் அதை தயக்கமின்றி ஏற்றேயாகவேண்டும்.

ஆனால் இரு தனி நாடுகளாய் பிரிந்துவிட்டபோதிலும் இருநாட்டு மக்களும் ஒரே கலாசாரம் கொண்டவர்கள்; ஒரு நாகரீகம் இருபுறமும் வளர்ந்து வருகிறதென்பதை நாம் ஏற்கவேண்டும் பொருளாதாரத்தில் இரண்டும் ஒன்றையொன்று எதிர்நோக்குகின்றன பாதுகாப்பு பிரச்னையும் ஒன்றே. பூகோளமும் பொருளாதாரமும் ஒரே உடலின் இரு அங்கங்களாய் அவற்றை அமைத்து விட்டன. ஆயினும் அரசியல் ரீதியில் இரு தனிநாடுகளாய்ப் பிரிந்துள்ள அவற்றை கொள்கையளவில் ஏற்றே யாகவேண்டும். அச் செயலையே பரஸ்பர உறவின் அடிப்படையாய்க் கொள்ளவேண்டும் ஏனெனில் அச்செய்கையாலேயே இரு நாடுகளும் சுதந்தரத்தை பாதுகாத்து, ஆசிய சமாதானத்திற்கும் அடிகோல முடியும்.

ஹிந்து முஸ்லிம்களிடையே நாகரீக தொடர்பு ஏற்பட்ட காலம் முதல், அது வளர்ந்துவந்து. தற்காலம் இரு வர்க்கத்தினரின் சிந்தனை, செயல்முறைகள் ஒன்றாய் பிணைத்து இன்றைய இந்தியகலாசரம் உருவாக வகை ஏற்பட்டது. முஸ்லிம்கள் இந்நாட்டை தமது தாயகமென பாவித்து இதன் முன்னேற்றத்திற்காக பெரும் அளவு பாடுபட்டார்கள் மேற்கத்தி நாடுகளுடன் வர்த்தகத்தை வளர்த்தனர். புதுப் புது கைத்தொழில்களை ஆரம்பித்தனர். அதனால்

சர்தோமான்ரோ கூறுவதுபோல் "ஐரோப்பாவை குற்றுயிராக்கி, ஆசியாவை செல்வம் கொழிக்கச் செய்யப்பட்டது." என்றநிலைமைஏற்பட்டது. சென்ற கால முஸ்லிம்கள் ஹிந்து நாகரீகத்தை அறிய அவர்களுடைய முக்கிய நூல்களை எத்துணை ஆழ்ந்து கற்றறிந்தனர். நாகரிக ஒருமை ஏற்பட எவ்விதம் உழைத்தனர் என்பதை முஸ்லிம் பெரியார்கள் எழுதிய நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்தியா-பாக். கூட்டுப் பாதுகாப்பு.

இனம் பொறுத்தமட்டில் ஒரு சிறு பாகத்தினர் தவிர இந்திய முஸ்லிம்கள் பெரும்பாலோரும் ஹிந்துக்களினின்றும் பிரிந்து வேறு இனத்தவராயில்லை முஸ்லிம்களின் பெரும்பான்மையினர் இந்து இனத்தவரே. மேலும் சமூக அமைப்பிலும் ஹிந்துக்களைப் போல் பொருளாதார பிரிவுகளைக்கொண்டே யிருக்கின்றனர். முஸ்லிம்களின் மணம், மரணம் முதலிய வைபவங்களிலும் ஹிந்துக்களைப் போன்ற சடங்குகளையே மேற்கொண்டுள்ளனர். அரபி அல்லது பார்ஸி மொழிகள் முஸ்லிம்களின் மொழிகளாயிருக்கவில்லை. அதற்குப் பதில் இந்திய பாஷைகளையே தங்கள் தாய்மொழிகளாக்கிக்கொண்டதுடன் தங்கள் மொழிகளின் பல சொற்களை இந்திய மொழிகளுடன் கலந்து, புது மெருகுடன் சோபிக்கச் செய்தனர்;

நம் சரித்திரத்தின் மத்தியகாலத்தில் மதம் ஒற்றுமையை தடைசெய்யவில்லை. ஹிந்துக்களின் பல தியான முறைகளை முஸ்லிம் சூபிக்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். உதாரணமாக :— மணிமாலை கொண்டு ஜபித்தல்; புலனடக்கம்; யோகாசனம்; தேவதரிசன போதனைகள் முதலிய ஹிந்து கருமங்கள் முஸ்லிம்களிடமும் பரவியிருந்தன இஸ்லாமிய கொள்கைகள் ஹிந்து தர்ம நெறிகளின் கூட்டுறவால் ஹிந்து முஸ்லிம்களிடையே மதாச்சாரவிழிப் பேற்பட்டது.

ராமாநந்திடம் பக்திகொண்டவர்களில் முஸ்லிம்களுமிருந்தனர் கபீர்தாஸரைப் பின்பற்றுபவர்களில் இன்று பல ஹிந்துக்கள் உளர். அவர்களை 'கபீர்-பந்தி" என்று நாமும் அழைக்கிறோம். கிரந்தத்தில் பாபாபரீத்போன் ஞானிகளின் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. லிங்காயத் ஜாதியாரின் பல கொள்கைகள் இஸ்லாம் முறைகளினின்றும் வகுக்கப்பட்டவையே ராமானந்த், கபீர் நானக், துக்காராம் முதலிய பெரியார்கள் ஹிந்து-முஸல்மான் அனைவருக்கும் ஆத்மீக தலைவர்களாய்க் கொண்டாடப் படுகின்றனர்.

முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியின்போது ஹிந்துக்களும், ஹிந்து ராஜ்யங்களில் முஸ்லிம்களும் உயர்ந்த பதவி வகிப்பதற்கு மதம் ஒன்றும் தடையா யிருக்கவில்லை. அக்கால சரித்திர சண்டைகளில் ஹிந்து-முஸ்லிம்களுக்கிடையே நடந்த சண்டையைக் காண்பதே அரிது. அதற்குப் பதில் முஸ்லிம்கள் தமது ஹிந்து எஜமானர்களுக்கும். ஹிந்துக்கள் முஸ்லிம் மன்னர்களுக்காகவும் உண்மையுடன் போரிட்டு பல தியாகங்கள் புரிந்த வரலாறுகள் சரித்திரம் எங்கிலும் காணக் கிடக்கின்றன. ஹிந்து முஸ்லிம்களிடையே, வேறுபாடுகள் தோன்றி முடிவில் நாடு துண்டாடப்பட்டு இரு தனி ஆட்சிகள் அமையப்பட்ட வருந்தத்தக்க நிலைமை கடந்த நூற்றாண்டின் பிற் பகுதியிலேயே தோன்றியது.

பூகோள ஒற்றுமை

பிரிவினையால் அரசியல் ஒற்றுமை சிதறி விட்டது. ஆனால் பூகோள அமைப்பில் இரு பகுதிகளையும் பிரிக்கும் எல்லைக்கோடு இருக்கவே முடியாது. இரு பகுதிகளுக்கும் ஒரே கடற்கரை, ஒரே எல்லைகள் ஒரே இயற்கைப் பிரிவுகள், சீதோஷ்ணம், நீர்நிலை முறை, நீர்ப்பாய்ச்சல் முதலிய யாவும் ஒன்றே. ஒரு நாட்டில் ஆரம்பமாகும் நதிகள் மற்றொன்றிலும் பாய்கின்றன. ஒரே மலைத்தொடர் இரு நாட்டின் பருவங்களுக்கும் காரணமாயமைந்துள்ளது, இயற்கை வளங்கள் இருபுறமும் சிதறிக்கிடக்கின்றன. குறிப்பாக இரு நாடுகளின் தொழில்களுக்கும் அத்யாவசியமான கனிப்பொருள்கள் இரு நாடுகளிலும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளன.

இந்திய நிலக்கரி எவ்விதம் பாகிஸ்தானுக்கு முக்கியமோ அதே அளவில் பாக். சணல், பருத்தியின்றி இந்திய தொழில்களுக்கும் பெரும் கஷ்டம் ஏற்பட்டு விடும். பிரிக்கப்படாத பஞ்சாப்பின் விவசாயத் தொழிலுக்கு உதவிகரமா யிருக்கும்பொருட்டே கால்வாய்ப்பாய்ச்சல் முறை தயாரிக்கப்பட்டது. ஆகவே பஞ்சாப் பிரிவினைக்குப் பின் பல பிரச்னைகள் எழுவது இயற்கையானது. வங்காள கிராமச் செல்வம் பிரிக்க முடியாதது. கி. வங்க பூமி மிக்க வளம் பொருந்தியது. சணலும் அரிசியும் அபரிமிதமாய் விளையக்கூடியது. ஆகவே அப்பொருள்கள் மேற்கு வங்க உற்பத்திப் பொருள்களுடன் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டியவை. ஆனால் பிரிவினைக்குப் பின் இம்முறையில் பல தடைகள் நேர்ந்துவிட்டன.

இத் தேசத்தின் வடமேற்கு, வடகிழக்கு எல்லைகள் பலம் பொருந்திய பாதுகாப்புக்கள் செய்யவேண்டிய பிரதேசங்களென பூகோள அமைப்பு எடுத்துக் காட்டுகிறது. அப் பிரதேசங்கள் அந்நியர் கையில் சிக்கிவிட்டால் தீபகற்ப சமவெளிப்பிரதேசமும் விழ்ந்ததுபோலவே. ஆனால் அவ்விரு பிரதேசங்களிலும் இன்று வெறுப்பு மனப்பான்மை மிக உக்கிரநிலைமையடைந்துள்ளது ஆகவே அவ்வுணர்ச்சியை கட்டுப்படுத்தி, பரஸ்பர நேச மனப்பான்மை நிலவும்வரை

சரித்திரம் திரும்ப நடிக்கப்படும் என்ற அபாயம் இருந்தேதீரும். பயங்கர பொருளாதாரயுத்தம் நீடிப்பதால் வேறொரு அந்நிய ஏகாதிபத்தியம் இந்நாட்டை அடிமைப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்துவிடும் என்பது திண்ணம்.

பாதுகாப்பு பிரச்னை

அதிருஷ்டவசமாகபாதுகாப்புப்பிரச்னைகள் வேறுபாடுகள் கொண்டவையல்ல. புராதன காலம் முதல் வடமேற்கு எல்லைப்புறமாகாணம் அந்நியபடையெடுப்பாளருக்கு தலைவாசலாய் இருந்துவந்துள்ளது. அங்கிருந்தே பலரும் உள்நாட்டை ஆக்கிரமிப்பதில் வெற்றிபெற்றனர். சீனு, பர்மா, தென்கிழக்கு ஆசிய நாடுகள் முதலியவற்றில் தற்காலம் நிகழு . சம்பவங்களால் வடகிழக்கு எல்லை இந்தியாவுக்கு மட்டுமின்றி கிழக்கு பாகிஸ்தானுக்கும் மிக்க அபாயம் விளைவிப்பதாகும். நீண்ட கடற்கரையால் இந்தியாவுக்கு உள்ள படையெடுப்பு அபாயம் போலவே பாகிஸ்தானுக்கும் உண்டு. மேலும் விமானப் படைப்பெருக்கால் இருநாடுகளின் பாதுகாப்பு அந்தஸ்து பெரும் அளவு மாறுதலடைந்துள்ளது. இந்தியா பாக் கின் பெரிய பட்டணங்கள் அனைத்தும் ஒரே அளவில் ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளின் விமான படையெடுப்புக்கு இலக்காகும் விதத்தில் அமைந்துள்ளன. ஆகவே உலக யுத்தம் நேர்ந்தால் இந்தியா-பாக். நாடுகளின் பாதுகாப்பு கூட்டுமுறையில் இருப்பது அவசியமாகிறது. ஒருமுறை கூட்டுப் பாதுகாப்பு திட்டத்திற்கு இணங்கிவிட்டால், இன்று இரு நாடுகளிலும் உள்ள அவநம்பிக்கையால் பல முக்கிய இனங்களுக் கொதுக்காமல் ராணுவ இலாக்காவுக்கு செலவிடப்படும் அளவற்ற செல்வம் மிஞ்சிவிடும்.

1946-47-ல் இந்தியா கிழக்கு முனையில் சேனுதிபதி பதவிவகித்த லெப்டினண்டு ஜனரல் சர்பிரான்சிஸ் டோகர் வெளியிட்ட "இந்தியா பாதுகாப்பு" என்ற கட்டுறை மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை வெளியிட்டது. அதில் அவர் கூறுவதாவது:- இந்தியா-பாக்கிஸ்தான் கூட்டுமுறையில் பாதுகாப்பு காரியங்கள் மேற்கொள்ளாதவரை இந்தியநாடு பாதுகாப்பற்றது. ஆனுல் துரதிருஷ்டவசமாக இந்தியா - பாக் இருநாடுகளும் பரஸ்பரம் ஒன்றையொன்று அறிந்து கொள்ளவில்லையாதலால் சமாதான காலத்திலும் கூட்டுப் பாதுகாப்புப்பற்றி அவற்ருல் சிந்திக்கவும் முடியாது யுத்தம் மூண்டுவிடினும் பாக் தனது அண்டை நாட்டிடம் வடமேற்கு எல்லைப்புறத்திற்கு உதவி யனுப்பக் கோரும் என்ற நம்பிக்கையுமில்லை ஆனுல் இந்தியா-பாக்கிஸ்தானுக்கு ரஷ்ய அபாயம் நிச்சயம். ஆகவே இந்தியாவின் இயற்கை பாதுகாப்புக்களான வடமேற்கு கணவாய்களில் எதிரி தன் படை பலத்தை சேமித்துவிட்டால் தற்காப்புப் போருக்கு ஏற்ற இயற்கைச்சாதனம் உள்நாட்டில் வேறென்றுமில்லை. சிந்து போன்ற பெரிய நதிகளும் எதிரிகளைத்தடுத்து நிறுத்தக்கூடியவையல்ல." என்று கூறியுள்ளார். தவிற சமீபத்தில் விஜயம்செய்த பீல்டு மார்ஷல் ஸ்லிம்மும் இந்தியா-பாக். கூட்டு பாதுகாப்பு அவசியம் என்பதை கராச்சியில் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

கொரிய யுத்தம் விளைவித்துள்ள நிலைமை மார்ஷல் ஸ்லிம், ஜனரல் டோகர் கூறியுள்ளவற்றை ஆராயவேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிறது. கிழக்கு-மேற்கு நாடுகளிடையே நடந்துவரும் கொள்கைப் போர் பயங்கரகட்டத்தையடைந்துவருகிறது. ஏனெனில் கொரிய யுத்தத்தின் பல விளைவுகள் சாத்தியமே. துரதிர்ஷ்டவசமாக இச்சண்டை கொரியாவில் மட்டுமின்றி மற்ற நாடுகளையும் ஆக்கிரமித்து, மூன்ரும் உலக யுத்தத்திற்கு வித்திட்டு விட்டால், பாகிஸ்தானும் இந்தியாவும் அதனின்றும் தப்பித்துக்கொள்வது கடினமே பிறகு ..அவையுத்தத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளாவிடினும் இரண்டுக்கும் கூட்டு முறையிலேயே பாதுகாப்பு நிச்சயம். தனித்தனித்தாயிருந்து யுத்தத்திலீடுபடும் நாடுகள் மீது தமது செல்வாக்கை உபயோகிக்கும் சக்தி இருநாடுகளில் ஒன்றுக்கும் இருக்காது. ஆனுல் இருநாடுகளும் தங்கள் கூட்டு முயற்சியாலும் இயற்கை செயற்கை சாதனங்களாலும் யுத்தத்தின் போக்கை மாற்றியமைப்பது மட்டுமல்ல. மானிடவர்க்கத்தின் வருங்கால விதியை நிர்ணயிக்கும் சக்தியும் பெற முடியும். ஆனுல் விதிவசத்தால் இருநாடுகளிடையே உடன்பாடு ஏற்படாவிடில் இரண்டும் அவநம்பிக்கை சூகரத்தில் மூழ்கிவிடும். பிறகு அவற்றின் விதி என்ன என்பதை யாரும் அறிய முடியாது. மேற்கூறிய அரும் பெரும் சந்தர்ப்பங்களும், மானிட சமுதாயத்திற்கே கதிமோக்ஷம் அளிக்கும் வாய்ப்பும் கிடைக்கையிலே, இன்று இருநாடுகளிடையே வேறுபாட்டுக்குக் காரணமான சிறு பிரச்னைகளை அவற்றின் உண்மை நிலைமைக்கொப்ப ஆராயவேண்டும். இருநாட்டு மக்களின் சுக வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் உதவிகரமாயிருக்குமளவில் அவை தீர்க்கப்பட வேண்டும்.

அமெரிக்க உதாரணம்

அமெரிக்கக் கண்டத்தில் கனடாவும், யு எஸ்.சும் மிக நேச உறவுடன் இருந்து வருகின்றன. இருநாட்டு மக்களிடையே இன ஒற்றுமையே இல்லை. கனடியர் ஆங்கிலோ பிரெஞ்சு ஜாதியினர் அமெரிக்காவில் ஐம்கண்ட மக்கள் இனத்தவரும் வாழ்கிருர்கள். பொருளாதார ரீதியில் கனடாவெறும் விவசாய நாடே. யு. எஸ்.ஸோ விவசாயம், தொழில் துறைகளில் அகில உலகிலும் மிகமுன்னேற்றமடைந்துள்ளது. கனடாவும் யு. எஸ்.சும் பரஸ்பர வேற்றுமைகள் அதிகம் கொண்

டிருப்பினும் கூட்டுப் பாதுகாப்பு முறையை ஏற்றுக்கொண்டிருக்கையில் வேற்றுமைஎதுமில்லாது ஒற்றுமை அம்சங்கள் பலவற்றைக்கொண்ட இந்தியா-பாக். நாடுகள் கூட்டுப் பாதுகாப்பு முறை ஏற்றுக்கொள்வதற்கு தடை ஒன்றுமே இருக்க முடியாது.

இருநூற்றாண்டுவரை அந்நியருக்கு அடிமைப் பட்டிருந்து இந்தியா-பாக். நாடுகள் விடுதலைபெற்றுள்ளன. ஆனால் பொதுமக்களுக்கு பொருளாதார சுதந்திரம் கிட்டாவிடில் நாம் அடைந்த சுதந்திரம் அர்த்தமற்றதாகிவிடும். பொதுமக்கள் சுகவாழ்வு பெறவும் பொருளாதாரத்தில் முன்னேறவும் செய்வது இருநாடுகளுக்கும் முக்கிய விஷயமாகும். இருபுறத்திலும் வாழ்க்கைத்தரம் மிக உயர்ந்துவிட்டது; தொழிற்கலையும், அபிவிருத்தியும் துர்லபமே இந்நிலையில் தொழில் நிபுணர்கள் இல்லாத குறை முன்னேறுவதை தடை செய்கிறது.

இந்தியா-பாக். இருபுறத்திலும் சமுதாய பலம் மிகவும் அதிகம் இயற்கை வசதிகளுக்கும் அளவில்லை. அவற்றை பயன் படுத்தினால் பொதுமக்கள் நிலைமை பெரிதும் சீர்படலாம். தன் நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல சந்தை ஏற்படுத்தவுமே இங்கிலாந்து இந்தியஇயற்கை வளத்தை பயன்படுத்தியது ஆனால் இந்தியா-பாக் நாடுகள் தங்கள் பிரஜைகளின் வாழ்க்கை சீர்படவும், அத்தியாவசியப் பொருள்களுக்காக அந்நியர் உதவி நாடும் சாபக்கேட்டை துரத்தியடிக்கவும் மேற்கூறிய இயற்கை வசதிகளைப் பயன்படுத்தலாம். நாடு துண்டாடப்பட்டபோதிலும் இருபுறத்திலுமுள்ள இயற்கை வசதிகளை போட்டி மனப்பான்மையுடனின்றி, நேசமுறையில் பரஸ்பரம் அபிவிருத்திக்காக பயன்படுத்தலாம். இருநாடுகளின் பொருளாதார நிர்மாணக் காரியங்கள் கூட்டுறவு முறையிலேயே செய்யப்பட வேண்டும். பரஸ்பரம் வேற்றுமையை அதிகரிக்கும் முயற்சிகளை விட்டொழிக்கவேண்டும் உதாரணமாக சணல் உற்பத்தியனைத்தும் மேற்கு வங்க ஆலைகளுக்கே போதுமானதாயிருக்கையில், அதை அபிவிருத்தி செய்வதில் பாகிஸ்தான் அதிக கவனம் செலுத்துவது தவறு அஸ்ஸாமில் விளையும் தேயிலை சிட்டகாங் துறைமுகம் மூலம் ஏற்றுமதி செய்வது சுலபம். ஆனால் வெகு தொலைவில் உள்ள கல்கத்தாவுக்குக் கொணர்ந்து ஏற்றுமதி செய்வது வீண் செலவை அதிகப்படுத்தக்கூடியது. இந்தியா அனைத்திற்கும் உதவியளிக்கும் பொருட்டு மேற்கு பஞ்சாப் மற்றொருமுறை தானியக் களஞ்சியமாய் மாற வேண்டும். வசதிகள் இவ்விதம் கூட்டுமுறையில் பயன்படுத்தப்படுவதால் பொதுமக்கள் சுகமடைய முடியும். ஒருமுறை இந்நோக்கம் வெற்றிபெற்று, ஜனநாயக பொருளாதார சிக்கல் சீரமைந்துவிட்டால் தற்கால தொல்லைகளுக்கு அடிப்படைக்காரணங்கள் நிரந்தரமாய் தீர்ந்துபோகும்.

பொருளாதார சுமை

நேச உறவு முறிவாலும், யுத்தப்பிரச்சாரத்தாலும் இந்தியா-பாக். பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது இருபுறத்திலும் செய்யப்படும் அளவற்ற பாதுகாப்பு செலவினங்களால் பொருளாதார சீர்திருத்தம் சாத்தியப்படவில்லை. அத்யாவசிய காரியங்களுக்கு பயன்படும் அளவற்ற செல்வம் பாதுகாப்புக்காக செலவிடப்படுவதை பொதுமக்கள் விரும்பவில்லை. பொது மனிதன் விமானப்படை பெருக்கத்தையோ கடற்படை அபிவிருத்தியையோ பாராட்டுவதில்லை. குறைந்த விலையில் உணவு உடை, குடியிருப்புவசதிகள் பிறப்பு இறப்பு காரியங்களில் குறைந்த செலவு, வைத்திய வசதி, போக்குவரத்து சாதன அபிவிருத்தி முதலியவற்றிலேயே பொதுஜனங்கள் நாட்டம் கொண்டுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்திக்கேற்ப பல உன்னத காரிய திட்டங்களை நிறைவேற்றவும், சமூக முன்னேற்றத்திற்கு இயற்கை வசதிகளைப் பயன்படுத்தவும், செலடப்படவேண்டிய மூலதனம், ராணுவத்திற்கும், யுத்த தயாரிப்புகளுக்கும் செலவிடப்படுகிறது இத்தவறை உணர்ந்து தீர்க்கமாய் ஆலோசிக்கும் காலம், இருநாட்டு தலைவர்களையும் எதிர்நோக்குகிறது ஆகவே திறந்த மனதுடன் ஆலோசித்து சுமுகமான முடிவுக்கு வர வேண்டியது அவர்கள் கடமை.

இச்சந்தர்ப்பத்தில் இந்தியாவில் பட்ஜட் சமர்ப்பித்த சமயம் தற்கால பாகிஸ்தான் நிதிமந்திரி நிகழ்த்திய பிரசங்கத்தின் சுருக்கத்தைக் குறிப்பிடுகிறேன். நம் பாதுகாப்பு செலவு விகிதாச்சாரம் மிக உயர்ந்துவிட்டது. சமீபத்தில் விடுதலைபெற்ற ஒரு நாட்டின் ஒவ்வொரு ரூபாயும், பொதுஜன பொருளாதார நிலையை உயர்த்தவும், தேசீய அபிவிருத்திக்காகவும் செலவிட வேண்டியதவசியம். தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களிலேயே இவ்வளவு பணம் பாதுகாப்பு இனத்திற்கு ஒதுக்கலாம் பொதுமக்களின் சுகவாழ்வுக்காகவே இந்தியா-பாக். விடுதலை பெற்றன. ஆனால் இருபுற மக்களின் வாழ்வும் கலவரங்கள், குழப்பங்கள்மயமாகி பெரும் வேதனை தரத்தக்கதாகிவிட்டதைக் காண்கிறேன். ஒற்றுமையும் சமாதானமுமே முன்னேறறதிற்கும், சுமுக வாழ்விற்கும் முக்கியமானது என்பதை சந்தேகமற உணர்கிறேன். பரஸ்பர வேற்றுமை; அவநம்பிக்கை, பீதி முதலியவை நம்மை அபிவிருத்தி மார்க்கத்தில் முன்னேற விடமாட்டா. சமாதானத்தை நிலவச் செய்து, வருங்காலத்தில் உதவியளித்து, இருநாடுகளின் செல்வமும், பலமும் வசதிகளும் குறைந்த அளவு

ராணுவ செலவினங்களுக்கு ஒதுக்கத்தக்க சூழ்நிலையை சிருஷ்டிக்கும் ஆற்றல் இருதரப்பு அரசியல் வாதிகளுக்கும் சூன்யமாகிவிட்டதா? என்று குறிப்பிட்டது எனக்கு நன்கு நினைவிருக்கிறது.

மேற்கூறிய வாக்கியங்கள் போற்றுதலுக்கு உரியவை. நம் குறிக்கோளையடையத்தக்க முறையை மேற்கூறிய பிரசங்கத்தை ஆழ்ந்து ஆலோசித்து பெறக் கூடும் என்று நம்புகிறேன்.

டில்லி ஒப்பந்தம்

இருநாடுகளிடையே யுத்த பகிஷ்காரமும், பொது ஜன பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதும் நம் கொள்கை முக்கிய விதிகளாய் அமையவேண்டும். டில்லி ஒப்பந்தம் அதன் முதல் அடியாகும். ஆனால் அது உண்மை நிலைமையைவிட இருநாடுகளையும் அதிகம் திருப்திப்படுத்துகிறது. இருநாடுகளிடை வேறுபாட்டிற்குக் காரணமான பல முக்கியப் பிரச்னைகளும் பரஸ்பரம் ஆலோசனை, உடன்பாடுகளால் பலாத்காரமின்றி தீர்க்கப்படமுடியும் என்று உறுதியாகிறது. ஆகவே அவ்வொப்பந்தத்தை வெற்றிகரமாய் நிறைவேற்றி, கூட்டுப் பாதுகாப்பு கொள்கையை மேற்கொள்ளுவது அவசியம். அதன்படி யுத்த பகிஷ்காரமும், யுத்த காலத்தில் கூட்டுமுறை பாதுகாப்புக்கும் வகை செய்ய வேண்டியது அவசியம் இந்தியா-பாக். கிடையே கூட்டுப் பாதுகாப்புக் கொள்கை அமுலாகக் கூடியதே என்று மிஸ்டர் ஜின்னாவும் நம்பினர் என்பது இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத் தகுந்தது.

கூட்டுப் பாதுகாப்பு எவ்விதம் முக்கியமோ அதே அளவு பொருளாதார சுதந்திரமும் சமூக உரிமைகளும் அவசியமானவை. இவையும் இருநாடுகளின் ஒத்துழைப்பாலேயே அமுலாக்கப்பட வேண்டியவை. அதனால் இந்தியா-பாக். வசதிகள் அனைத்தும் பயன்படுத்தமுடியும். இருநாட்டு மக்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தினின்றும் விடுதலை கிடைத்து, அவர்கள் வாழ்க்கையும் வறுமையினால் பீடிக்கப்படாது சௌஜன்யம் பொருந்தியதாகிவிடும்.

இன்று இந்தியாவில் உணவு தான்யப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் கோதுமை அரிசி முதலிய உணவு தான்யங்களைத் தருவித்து அதைப் போக்கிவிடலாம். பாக். சணல், பருத்தி; முதலியவற்றை இந்திய நிலக்கரி, இரும்பு, எஃகு, மாங்கனீஸ் மற்ற அத்யாவசியப் பொருள்களுடன் பண்டமாற்றம் செய்துகொள்ள முடியும். இவ்விதம் ஒருபுறப் பற்றாக்குறையை மறுபுற உபரியால் சீர்படுத்தி இருபுற மக்களின் சேவை சிறந்த முறையில் செய்யமுடியும்.

இந்தியா-பாக். கூட்டுப் பாதுகாப்பும், வெளிநாட்டுக் கொள்கையும் சர்வதேச விவகாரங்களில் எத்தகைய செல்வாக்கடைய முடியும் என்பதை அதிகம் விவரிக்க வேண்டிய அவசியமில்லை. இந்தியா-பாக். நாடுகள் இந்தோநேஷிய விடுதலையில் தமது கடமையை எல்விதம் நிறைவேற்றின வென்பதை சமீப காலத்தில் நாம் பார்த்துள்ளோம். அவற்றின் பெரு முயற்சியால் இன்று இந்தோநேஷியா விடுதலையடைந்து தன் விதியை நிர்ணயிக்கும் உரிமை பெற்றிருக்கிறது இன்று மத்திய கிழக்கு நாடுகள் அரசியல் பகடைக்காய்களாயுபயோகிக்கப்படுகின்றன. அங்கு எண்ணை விஷயமாய் நடைபெறும் தில்லு மல்லுகள் பல வல்லரசுகள் கவனத்தை கவர்ந்துவிட்டது. ஆகவே மத்திய கிழக்கு ஆசியா வட ஆப்பிரிக்கா நாடுகளுக்கு இன்று அவசியமான உதவியை இந்தியா - பாக். உறவே அளிக்க முடியும். அவற்றை அரசியல், பொருளாதார விடுதலையளிக்க இரு நாடுகளும் தக்க உதவி செய்யமுடியும். உலக சமாதானத்திற்கு ஆசிய ஒற்றுமையே முக்கியம் ஏனெனில் இன்று அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு அடிமையாய்க் கிடக்கும் ஆசிய நாடுகள் மூன்றும் உலக யுத்த அரங்கமாகி விட்டால் அதனால் ஆசிய மக்கள் பாழாகி விடுவர் மேலும் உலக முன்னேற்றம் பன்னூறுண்டுகள் சாத்தியப்படாது.

பத்திரிகையாளர் கடமை

இந்தியா-பாக். உறவு சக்திபெறும் துறையில் பத்திரிகைகளுக்கு கடுமையான பொறுப்புக்கள் உள. பொதுமக்களிடை நிலவும் பயம், பீதி, அவநம்பிக்கை முதலியவற்றை அகற்றி, பரஸ்பர ஒற்றுமை, நேசம் நம்பிக்கை மனப்பான்மையை வளர்க்கச்செய்வது பத்திரிகைகளின் முதற்கடமையாகும். இன்று பத்திரிகையாளர், நிர்மாணமுறையை ஏற்படுத்திக்கொள்வது அவசியம். அதனாலேயே மக்களின் மனப்போக்கை மாற்றியமைக்க முடியும்; நேச மனப்பான்மையை வளர்த்து, கூட்டு பாதுகாப்பு, பொருளாதாரம், அந்நியநாட்டுக் கொள்கை என்ற புனித நோக்கம் வெற்றி பெறச் செய்ய முடியும். ஒரு முறை வேற்றுமைக்கு சமாதிகட்டி, நம்பிக்கையும் நேசமும் ஏற்பட்டு விட்டால் பிறகு ஆசியாவின் ஒடுக்கப்பட்ட தேசத்தாரை விடுவித்து அவர்களை முன்னேறச் செய்வதில் இருநாடுகளும் தங்கள் சக்தி அனைத்தையும் பிரயோகிக்க முடியும். அதனால் ஆசிய நிர்மாணமும் சமாதானமும் நிலை பெறுவதுடன் உலக சமாதானமும் எளிதாகிவிடும்.

இந்நிலைமையை பண்டித நேருவும், லியாகத் அலிகானும் பூரணமாய் உணர்வதாய்த் தெரிகிறது. இரு நாட்டு மக்களும் இதன் அவசியத்தை, அவசரத்தையும் உணர முயல்வாரா? பரஸ்பர ஒத்துழைப்பின் இரு நாடுகளும் ஒருபோதும் முன்னேற முடியாது என்ற

உண்மையை கூடிய சீக்கிரம் பொதுமக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

பாக். நிதிமந்திரி தமது பிரசங்கத்தை முடித்த வாக்கியத்தைக்கொண்டே இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறேன். "பகைமையும் அவநம்பிக்கையும் அகற்றப்படவேண்டும். தானும் சந்தோஷமாயிருந்து மற்றவரையும் ஆனந்தமாயிருக்கச் செய்யும் கொள்கையை மேற்கொள்ளவேண்டும். மேற்கத்திய தத்துவார்த்தத்திற்குப் பதில் கீழ்நாடுகள் என்றும் ஆத்மீகத்தையே போற்றிவந்துள்ளன. ஆனால், நேசம், சமாதானம் அன்பு, தியாகம் போன்ற உத்தமக் குறைகளுக்குப் பதில் பகைமை, குரோதம், சுயநலம், குழப்பம் அவநம்பிக்கை என்னும் சாபக்கேடான மார்க்கத்தை இன்று நாம் பின்பற்றவில்லையா? என் இதய ஒலியே இவ்வேண்டுகோள். என் ஆத்ம துடிப்பே இவ்வார்த்தைகளில் வெளியிடப்படுகிறது. இந்நாட்டிலும், இந்தியாவிலும் பதியும் நேர்மையுள்ளவர்களையே நான் வேண்டுகிறேன் அவர்கள் தன்னையே நாசம் செய்யும் கோடாரிக்காம்பை ஆழப்புதைத்து இருபுரமும் அவதிகளுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாகி வாடிக்கிடக்கும் பொதுமக்கள் உய்யத்தக்க மார்க்கத்தை மேற்கொள்ளவேண்டுகிறேன்: அதனால் பாழாக்கும் சுமை குறைந்துபோகும். பொது மக்களுக்கு நன்மை செய்வது எளிதாகிவிடும். இம்மட்டுமல்ல. ஒவ்வொரு தனி மனிதனும் முன்னேறவும், சுகமாய் வாழவும் வழி ஏற்படும்; என்று பாக். நிதி மந்திரி கூறினார்.

உண்மையில் இது மிக உருக்கமான வேண்டுகோளாகும். இந்தியா-பாக். மக்கள் இவ்வேண்டுகோளுக்கு செவி சாய்ப்பாரா?

துண்டாடப்பட்ட இந்திய பூகோள அமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அரசியல் பிரிவினை அதை இருபாகங்களாய்ப் பிரிக்கலாம். ஆனால் அதனால் அடிப்படையிலும், இயற்கை விஷயங்களிலும் எவ்வித வித்யாசமும் நேர்ந்துவிடவில்லை. கனடா, அமெரிக்கா, அயர், ஹாலந்து பெல்ஜியம், நார்வே, ஸ்வீடன் முதலியவை இத்தகை அரசியல் பிரிவினைக்கு உதாரணங்களாகும். ஆனால் அவையாவும் பரஸ்பரம் நேசஉறவையே மேற்கொண்டு, ஒன்று மற்றொன்றின் முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திக்கும் உதவியாயமைந்துள்ளன. ஆனால் அதற்கு முற்றிலும் மாறாக அண்டைநாடுகளிடையே பகைமை மூளுவதால் வருந்தத்தக்க நிலைமை ஏற்பட்டு, பலஹீனமடைந்த உதாரணங்களும் பல உள.

இந்தியா-பாக். நேச உறவுக்கு உதவும் அநேக அடிப்படை விஷயங்கள் உள்ளன. உலகம் இன்று மூன்றாம் யுத்த அபாயத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இருநாடுகளின் பாதுகாப்பு பிரச்னையும் முக்கியத்துவம் அடைந்துவிட்டது. இவ்வுப கண்டத்தின் இயற்கை ஒற்றுமை மறுக்கமுடியாத உண்மையாகும். அதனால் கூட்டு ராணுவக் கொள்கை தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது. ஆயிரம் மைல் நீண்டு 250 மைல் அகன்று வியாபித்திருக்கும் இமயம் இவ்வுபகண்டத்தை பாதுகாக்கிறது. பண்டைகாலத்தில் பல படையெடுப்புக்கள் இதனால் தடுக்கப்பட்டன. ஆகாய விமானப் படையெடுப்பு சாத்தியமான இந்நவீன காலத்தில், இம்மாபெரும் கோட்டைச் சுவர் பகைவர்களுக்கு பெரும் தொல்லைகள் விளைவிக்கக்கூடியதாகும். ஆகவே வடதிசையினின்றும் படையெடுப்பு அபாயமில்லை. எவ்வித சக்தி வாய்ந்த தேசமும் இமயத்தைத் தாண்டி தரைப் போரில் வெற்றி காணமுடியாது. ஹைட்ரஜன் குண்டுகள் பொருத்தமட்டில் நாம் பூகோள அமைப்பை நம்பி வாழமுடியாது. பூகோளம் அவற்றிற்குத் தடையாயிருக்கமுடியாது.

கூட்டு எல்லைகள்

இந்தியாவின் வடமேற்கு, வடகிழக்கு எல்லைகள் அபாயம் விளைவிக்கக்கூடியவை என்பதைச் சரித்திரமும் உறுதிசெய்கிறது. இன்று அப்பிரதேசங்கள் பாகிஸ்தான் ஆட்சியில் அமைந்துள்ளன. வடமேற்கு எல்லை, இமயத்தின் வடமேற்கு பாகத்தை ஒட்டினாற்போல் இருக்கிறது. இப்பிரதேசம் சமுத்திரமட்டத்தினின்றும் அதிக உயரத்திலில்லை அதிகமாயின் பத்தாயிரம் அடி உயரமேயுள்ளது. இங்கிருந்து பல ஓடைகள் சிந்து சமவெளி நோக்கிப் பாய்கின்றன. அவற்றால் கடந்துவரத்தக்க பல கணவாய்கள் அமைந்துள்ளன என்பதை யாவரும் அறிவர். அதிக உயரமுமில்லாததால் அந்நியரின் படையெடுப்பைத் தடுக்கும் சக்தி வாய்ந்ததுமல்ல. இக்காரணத்தாலேயே பலம் பொருந்திய படைகளை வ. மே. எல்லைப்புறத்தில் பிரிட்டிஷார் வைத்திருந்தனர். இன்று பாக். ஆப்கான் மலைஜாதியினரிடையே நிலவிவரும் குழப்பம்மிக்க நிலைமையால் பயனடைந்து எந்த வல்லரசும் இவ்வுபகண்டத்தில் புகமுடியும். காஷ்மீர் எல்லைகள் ரஷ்ய எல்லைக்கு மிக சமீபத்திலுள்ளன. மேலும் கம்யூனிஸ்டுகளிடம் சிக்கியுள்ள சிக்கியாங் மாகாண எல்லைகள் காஷ்மீர் எல்லைகளுடன் சேர்ந்தேயுள்ளன. ஆப்கானும், ஈரானும் பலமற்ற நாடுகளாகையால் இப்பிரதேசம் பாதுகாப்பற்ற நிலைமையும், அதனால் விளையும் விளைவுகளை ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயமுமாகும். வடமேற்கு எல்லையால் பாகிஸ்தானுக்கு அபாயம் என்று நினைப்பது பெரும் அரசியல் தவறாகும். ஏனெனில் இம்மலைப்பிரதேசத்தை பகைவர்கள் தாண்டிவிட்டால் சிந்து சமவெளி முதல் வங்காளக் கடற்கரை வரை அவர்களை தடை செய்யத்தக்க இயற்கைத்தடை ஒன்றுமேயில்லை. அவ்வித நிலைமையில் இந்தியா பெரும்

அபாயத்தில் சிக்கிவிடும். உதாரணமாக, வறுமை மேலிட்டதால் இம்மலைப் பிரதேசத்தை பாகிஸ்தான் பாதுகாக்கமுடியாமற்போனால் இந்தியாவும் பாதுகாப்பற்றதாகிவிடும். ஏனெனில் இந்தியாவின் பாதுகாப்பு பிரதேசங்கள் பாகிஸ்தானிலேயே அமைந்துள்ளன. இவ்வுண்மை நிலைமையை யோசிக்கையில், இந்தியா — பாக். கிடையே கூட்டுப் பாதுகாப்புக்கொள்கை மிக அவசரமும் அவசியமும் என்பது வெளிப்படை

வடகிழக்கு எல்லை

இந்தியாவின் வடகிழக்கெல்லையின் பெரும்பாகம் ஒரு பக்கம் பர்மா-திபேத்துக்கிடையிலும் மறுபுறம் ஆஸாம்-திபேத்துக்கிடையிலும் பாகிஸ்தானில் அமைந்துள்ளது ஆகவே கி.எல்லை அநேகமாய்பாகிஸ்தானில் அமைந்துவிட்டதால், இவ்விடத்திலும் இந்தியா-பாக். கூட்டுபாதுகாப்புக்கொள்கை பலன்தரத்தக்கது என்பது தவிர்க்கமுடியாத உண்மையாகிவிட்டது கிழக்கு, தென்கிழக்கு ஆசியாவில் இன்றுள்ள நிலைமையால் இந்தியா-பாக் இரண்டிற்கும் பெரும் அபாயம் எதிர் நோக்குகிறது.

இரு நாடுகளின் கடற்படைபலம் போதுமானதாயில்லையாகையால், கடலிலிருந்தும் அபாயம் நேரக்கூடும். பரஸ்பர அவ நம்பிக்கை இவ்வபாயத்தை அதிகமாக்குகிறது. கடற்படைத் துறையிலும் இரு நாடுகளும் கூட்டுப் பாதுகாப்பு முறை ஏற்றுக் கொண்டால் நிலைமை சற்று எளிதாகிவிடும். இரு நாடுகளின் கடற்கரைப்பட்டினங்கள் கடற்படை தளங்களாய் மாற்றியமைக்க முடியும். அதனால் கடற்கரைப் பாதுகாப்பு சுலபமாகும். தென் கிழக்கு ஆசியாவுக்கு 'மிக சமீபத்திலிருப்பதால் வங்காளத்தின் சிறு துறைமுகங்களும் கடற்படை தளமாக மாற்றியமைக்க முடியும். அஸாம் ஏற்றுமதிப் பொருள்கள் தொலைவிலுள்ள கல்கத்தாவுக்குக் கொணர்வதைவிட்டு சமீபத்திலுள்ள சிட்டகாங் துறைமுகம் மூலம் அனுப்ப முடியும்.

வடமேற்கிலிருந்து படையெடுப்பு நடந்தால் பாகிஸ்தானே அதை எதிர்க்க வேண்டிவரும். தென் கிழக்கு ஆசிய நாடுகளைப் போன்ற சக்தியுள்ள நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதால் பாகிஸ்த்தானுக்கு எவ்வித பலனும் கிடைக்கப்போவதில்லை. பாக். கின் வடராணுவ தளமான வடமேற்கு எல்லைப்புறம், பலுசிஸ்தான் முதலியவற்றின் பொருளாதார நிலைமை மிக மோசமடைந்துள்ளது. மே பஞ்சாப் தவிர மற்ற மாகாணங்கள் யாவும் பற்றுக்குறைப் பிரதேசங்கள். ஆதவே பலமுள்ள எதிரியை எதிர்த்து போரிடும் செலவை பாகிஸ்தான் சமாளிக்க முடியாது ஆகவே பாகிஸ்தான் ராணுவ பலக்குறை இந்தியாவின் சக்த்தியைக் குறைத்துவிடக்கூடியதாகும்.

பொருளாதாரம்

இருநாடுகளின் பொருளாதாரத்தை பாதிக்கும் விஷயம் இயற்கை வசதிகளின் தவறான பிரிவினையே. உணவு விஷயத்தில் பாகிஸ்தான் நல்ல நிலைமையிலேயே இருக்கிறது. இவ்வுபகண்டத்தின் 280 முதல் 285 மிலியன் ஏகர் விளைச்சல் பூமியில் 42 முதல் 44 மிலியன் ஏகர் நிலம் பாகிஸ்தானில் பயிர் செய்யப்படுகிறது. (10 லக்ஷம் = 1 மிலியன்) மேலும் 60முதல் 65 மிலியன் ஏகர் ஆற்றுப்பாய்ச்சல் நிலத்தில், 19 மிலியன் ஏகர் பாகி தானில் உள்ளது. மொத்தத்தில் வேளாண்மைக்கு ஏற்ற பூமியின் மூன்றில் ஒருபாகம் பாகிஸ்தானில் இருக்கிறது. நெல்விளையும் 74 மிலியன். கோதுமையின் 34 மிலியன் ஏகர் பூமியில் பாகிஸ்தானிடம் 19—9-1/5 மிலியன் ஏகர் பூமி முறையே இருக்கிறது. இவ்விரு விளைபொருள்களைப் பொருத்தமட்டில் பாகிஸ்தான் உபரிதேசமாய் விளங்குகிறது. நெல் பொருத்தமட்டில் சந்தேகமேயாயினும் கோதுமையில் நிச்சயம் உபரிப் பிரதெசமே. இந்தியாவிலோ கிழக்கு பஞ்சாப் தவிர மற்ற எந்த மாகாணமும் இருவகை தானியங்களிலும் உபரிப் பிரதேசமில்லை. ஆனால் மே. பஞ்சாப் சிந்து மாகாண உபரி விளைச்சல் மிக அதிகமாகையால் பாகிஸ்தான் பொருளாதாரத்தை சீர்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்ததாகும்.

எண்ணைவித்துக்கள், கரும்பு, புகையிலை. தேயிலை முதலிய பொருள்கள் விளையும் பூமியின் 1/8 பாகம் பாகிஸ்தானில் இருக்கிறது. குறிப்பாக சணல் பருத்தி முதலிய பொருள்களில் 75 முதல் 85 சத விகிதம் பாகிஸ்தானே ஏற்றுமதி செய்கிறது. பாக். பருத்தி நீண்ட இழையுள்ள அமெரிக்கப் பருத்தியைப்போல் உயர்ந்த ரகமாகும்.

பாக் கைத்தொழில்கள்

தொழில் துறையில் வசதிகள். முன்னேற்றம் முதலியவற்றில் பாக். பின்தங்கிய நாடே. பருத்தி ஆலைகள் 587ல் பாகிஸ்தானில் பதினைந்தே உள்ளன. சணல் ஆலை ஒன்றுமே அங்கில்லை. 1760 சர்க்கரை ஆலைகளில் பாகிஸ்தானில் பதினைந்தே இருக்கின்றன. இரும்பு, எஃகு ஆலை ஒன்றும் இல்லை. சுண்ணாம்பு, சிமெண்டு தொழிற்சாலைகள் 75ல் பாக். கில் 8 உள்ளன. காகித ஆலைகள் ஒன்றும் இல்லை. ஆனால் இந்தியாவிலே 19 காகித ஆலைகள் இருக்கின்றன. 112 கண்ணாடி தொழிற்சாலைகளில் பாகிஸ்தானிடம் வெறும் ஐந்தே இருக்கின்றன.

உற்பத்திப் பொருள்கள், (சணல், பருத்தி போன்றவை) தொழிற்சாலைகள் மட்டுமின்றி வேறு தொழில்களை ஆரம்பிக்கும் வசதியும் மிகக் குறைவே. பெரிய பெரியதொழில்களை ஆரம்பிக்க வசதிகள் காணவும் முடியும். உதாரணமாக இந்தியாவில் 28 மிலியன் டன் நிலக்கரி கிடைக்கையில் பாகிஸ்தானில் இரண்டு

லக்ஷம் மணுவே கிடைக்கிறது. தவிர, அங்கு இரும்பு, மாங்கனீஸ், அபிரகம் தங்கம் மற்ற கனிப்பொருள்களே கிடைக்கவில்லை என்பதுடன் அவை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. பாகிஸ்தானில் கிடைக்கும் முக்கிய கனிப்பொருள் கீழ்கண்டவையே:—

(1) பெட்ரோலியம்—15 முதல் 20 மிலியன் காலன்கள்

(2) கிரோமைட் — 22—27 ஆயிரம் டன்கள்

(3) உப்பு—6 லக்ஷம் டன்கள்.

மின்சாரம் பொருத்தமட்டில் நிலக்கரிப்பஞ்சம் அதற்கு குறுக்கே நிற்கிறது. அதற்குப் பதில் நீர் வீழ்ச்சிகளே. ஆனால் பாகிஸ்தானில் தற்காலம் அதற்கு குறை ஏற்பட்டுவிட்டது. மே. பஞ்சாபுக்கு நீர்வீழ்ச்சி மின்சாரம் கி. பஞ்சாபேசப்ளை செய்கிறது. இமய மலைச்சாரலில் மின்சார உற்பத்திக்கு ஏற்ற பல நீர்வீழ்ச்சிகள் உள்ளன. ஆனால் காஷ்மீர் ஒத்துழைப்பின்றி அவற்றினின்றும் பயன்பெற முடியாது. கி. பாக். கிலும் நீர்வீழ்ச்சிகள் அநேகமாய் ஆஸாமில் உள்ளனவாகையால் இந்திய ஒத்துழைப்பாலே நன்மையடையமுடியும்.

மேற்கூறியவற்றினின்றும் சில உண்மைகள் வெளிப்படுகின்றன.

எல்லா உணவுப் பொருள்களுக்கும் இந்தியாவில் பற்றுக்குறையுண்டு. அதேசமயம் பாக்.கில் தேவைக்கு அதிகம் உற்பத்தியாகின்றன. இந்தியாவின் மற்ற அண்டை நாடுகளிலும் உற்பத்திப்பொருள் குறைவே: பர்மாவில் மட்டும் தேவைக்கு அதிகம் உற்பத்தியாகி வந்தது. ஆனால் கலவர நிலைமையால் அதுவும் பாழாகிவிட்டது. ஆகவே பாக். உபரி தானியங்களை வாங்குவதே இந்தியாவின் திறமைக்கு ஏற்றதாகும்.

சணல் பிரச்னை மிக துல்யமானது. பாக். சணலை இந்தியா நிராகரித்தால், சணல் தொழில் பாதகமடையும். அதனால் பெரும் அபாயகர விளைவுகள் தோன்றக்கூடும். பாக், பருத்தி இறக்குமதியை தடைசெய்ததால் இந்தியா மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. துணி உற்பத்தி தொழில் கேவலநிலைமையடைந்துவிட்டது. இந்திய சீதோஷ்ண நிலை நீண்ட இழையுள்ள அமெரிக்க பருத்திக்கு ஏற்றதல்ல. ஆகவே பாக். பருத்தியை புறக்கணிப்பது நல்லதல்ல வென்பது வெளிப்படை.

விளை பொருள்களைப் பொறுத்தமட்டிலும் இந்தியா—பாக்.கைஎதிர்பார்க்கவேண்டி யிருப்பதுபோல் தொழில் துறையில் முன்னேற்றமடைய பாக்—இந்தியாவின் தயவை நாடவேண்டியிருக்கிறது. பாக். கைத்தொழில் பலஹீனத்தை மேலே விவரித்துள்ளோம் மின்சாரக்குறைவும்—கனிப்பொருள் பஞ்சமுமே அதற்குக் காரணம். ஆகவே பாக் - தொழில் துறையில் முன்னேற வேண்டுமாயின் இந்தியாவினின்றும் நிலக்கரி, இரும்பு, எஃகு மாங்கனீஸ், அபிரகம் முதலிய கனிப்பொருள்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தியாவுடன் நேசமாயிருந்தே மின்சாரத்துறையில் பாக்-முன்னேற முடியும். அதேபோல் குறைந்த விலையில் தன் அண்டை நாட்டினின்றும் உப்பு வாங்க இந்தியா நினைத்தால் பாக்—வுடன்நேச மனப்பான்மையோடு இருக்கவேண்டியதவசியம்.

ஒற்றுமைப்பு தவிர்க்க முடியாதது

மேற்கூறிய உண்மைகளினின்றும் ஒன்று மற்றொன்றை அண்டி முன்னேறவேண்டியது அவசியம் என்று புலனாவதுபோல் மற்ற சில விஷயங்களும் இந்தியா—பாக். நேச உறவை வற்புறுத்துகின்றன. பஞ்சாப் வாய்க்கால் பாய்ச்சல் பிரச்னை அவற்றில் முக்கியமானது. வாய்க்கால் பாய்ச்சலின் மூலஸ்தானம் கிழக்கு பஞ்சாபில் அமைந்துள்ளது. இரு நாடுகளிடையே வேற்றுமை நிலவினால், அதனால் பாக்கிஸ்தானுக்கு தவிர்க்க முடியாத சில தொல்லைகள் எதிர் நோக்கக்கூடும் அதேபோல் மின்சாரம் உற்பத்தி நிலையங்கள் யாவும் கிழக்கு பஞ்சாபில் அமையப் பெற்றிருப்பதால் பாக் - மின்சாரத்துறையில் நஷ்டமடைந்து இந்தியாவுடன் பகைமைகொள்ள முடியும் மேலும் பூகோள அமைப்பின் உண்மை நிலையும். போக்குவரத்துத் துறையிலும் பரஸ்பர ஒத்துழைப்பினாலேயே இரு நாடுகளும் பயன்பெற முடியும் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக்குகிறது. இதனால் ஒருபுறத்து மக்கள், மறு பக்கம் செல்ல சௌகரியம் ஏற்படுவதுடன் கச்சாப் பொருள்களும், உற்பத்திப் பொருள்களும் பரஸ்பரம் மாற்றிக்கொள்வது சுலபமாகிவிடும்.

இரு நாடுகளிடையே உள்ள அரசியல் எல்லைக் கோடுகள் அவற்றை தனித் தனியே பிரிக்கக்கூடியவை என்று நினையாமல் பரஸ்பரம் இணைக்கக்கூடியவை என்றே கொள்ளவேண்டும். இந்திய-பாக்கிடையே எவ்வித எல்லையும் இயற்கை சிருஷ்டித்திருக்கவில்லை. ஆகவே தனித்திருப்பதால் இரு நாடுகளும் பலனடைய முடியாது. கூடியமட்டிலும் ஒத்துழைப்பு அவசியம். இந்த சாதாரண விஷயத்தை இருபுறத்திலும் விஷயமறிந்த தலைவர்கள் நன்குதான் உணருகிறார்கள் அறிவிலிகள் அவர்களுடைய முன்னேற்றப்பாதையில் தடை விதிக்கின்றனர். ஆகவே, கூட்டுப்பாதுகாப்பு; பொருளாதார கொள்கையே இரு பிரதேசங்களுக்கும் ஏற்றது. பிரச்னைகளுக்கு தனித்திருப்பது பரிகாரமல்ல கூட்டுறவே பலன் அளிக்கக்கூடியது என்பதே திண்ணம்.

29 MAY 1951

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிரு முறை பத்திரிகை

மலர் 3 } 8—1—1951 திங்கட்கிழமை { இதழ் 11

ஹிமாசலம் சரிந்தது.

நவீன இந்திய சிற்பி சர்தார் மறைவு.

'இரும்பு மனிதன்'' "தளரா உறுதியின் உறைவிடம்'' "அரசியல் விவேகி'' "தீர்க்க தரிசனமும், சிறந்த ஆற்றலும் படைத்தமாபெருந் தலைவர்'' என்று இந்தியநாடு கொண்டாடிய வீர புருஷனை, 15-டிசம்பர், காலை 9-37-மணிக்கு காலதேவன் கொள்ளைகொண்டு போய்விட்டான். ஒன்றரை மாதத்திற்கு முன்புதான் சர்தார் வல்லபாய் படேலின் 75-ம்ஆண்டு விழாவை இந்தியமக்கள் கொண்டாடினர்கள். அகில தேசமும் அவர் பல்லாண்டு வாழ வேண்டுமென்று பிரார்த்தித்தது. ஆனால் சரித்திர பிரசித்தமான அத்தினத்தை சர்தார் சபர்மதி ஆசிரமத்தில் கொண்டாடினர். பிறந்த விழாவின்போது :—

"காந்திஜி கஸ்தூரிபாய் போலாபாய் தேசாய் முதலியவர்கள் சென்று விட்டார்கள். அவ்விடம் போய்ச்சேரவே என் மனமும் விரும்புகிறது.'' என்று கூறினர் சர்தார்ஜி.

கொண்ட நோக்கங்கள் அனைத்திலும் வெற்றி கண்ட சர்தார் படேலின் ஆசை ஒருபுரமும் தேச மக்களின் பிரார்த்தனைகள் மற்றொரு புறமும் நின்றன. ஆனல் இச்சமயமும் வெற்றி சர்தார்ஜிகாலடியிலேயே தஞ்சம் புகுந்தது ஆகவே அவருடைய கடைசி ஆசையும் நிறைவேறிவிட்டது.

1916-ல் அஹ்மதாபாத் நெசவாலை முதலாளிகளுக்கும் தொழிலாளருக்கும் எற்பட்ட தகராரை காந்திஜியின் ஆக்ஞைப்படி, தீர்த்துவைக்கும் பொருப்பையேற்றுக்கொண்ட தினமே சர்தார்ஜியின் அரசியல் வாழ்வின் ஆரம்ப நாளாகும் அதற்கு முன் அவர் ஒரு சிறந்த வக்கிலா யிருந்தார். வக்கீல்தொழில் நடத்திவரும் காலத்தில் நடந்த ஒரு சம்பவம் சர்தார்ஜியின் தனிச் சிறப்புகளை விளக்கக் கூடியதாகும். அஹ்மதாபாத் நியாயஸ்தலத்தில் ஓர் வழக்கில் சட்ட நுணுக்கங்களை வாதித்துக் கொண்டிருக்கையில் சர்தார் படேலுக்கு ஒரு தந்தி கிடைத்தது அத்தந்தியை வாசித்துவிட்டு தமது வாதத்தை அவர் நீடித்து நடத்தினர். முகக் குறிப்பிலிருந்து தந்தி வாசகம் என்னவென்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. சர்தார்ஜியும் ஒன்றும் கூறவில்லை. விவாதம் முடிந்தபின் கேட்டபோது தமது அருமை மனைவி மரணமடைந்த செய்தியே தந்தியில் கூறப்பட்டிருந்ததென்பதை சர்தார்ஜி கூறியபோது; சர்தார் பட்டேடேலின் திடசித்தம் கடமை பக்தியை யாவரும் புகழ்ந்து கொண்டாடினர்கள். அவ் விரு சிறப்புக்களும் சர்தார்ஜியின் வாழ்க்கையில் நிறைந்து கிடந்ததை அவருடைய பிற்கால வாழ்க்கை உறுதிப்படுத்தியது

தாய் நாட்டிற்கு விடுதலையளிக்க அவர் புரிந்த தொண்டு அளவற்றது. பர்தோலி சத்யாக்கிரகத்தில் அவருடைய சிறந்த ஆற்றலைக் கண்ட காந்திஜி "சர்தார்'' என்ற பட்டம் அவருக்கு அளித்தார் உப்பு சத்தியாக்கரகத்தில் டண்டி யாத்திரையில் காந்திஜி கண்ட வெற்றிக்கு பெரும்பாலும் சர்தார்ஜி புரிந்த தொண்டே காரணமெனலாம். கிராமம் கிராமமாகச் சென்று தக்க சூழ்நிலையை ஏற்படச்செய்தவர் அவரே. விடுதலைப் போரில் சர்தார் ஆற்றிய இரு பெரும் தொண்டுகள் இவைதாம். தவிர அவருடையபெரும் தொண்டை விவரிக்க 'சர்தாரின்றி எந்த தேசிய இயக்கமும் நடக்கவில்லை'' என்று கூறுவது பொருந்தமானதாகும். அநேக முறை சிறைவாசம் புகுந்தார். ஆனல் விடுதலை யடைந்ததும் அதே ஆர்வமுடன் தேசிய தொண்டில் ஈடுபட்டார்.

சுதந்திரம் கிடைத்தபின்பும் அவர் தேசியத் தொண்டிலேயே ஈடுபட்டிருந்தார். உதவி பிரதமராயிருந்த அவரிடம். உள்நாட்டு சமஸ்தான இலாக்காக்கள் அளிக்கப்பட்டன நிர்வாகத்துறையில் அவர் ஆற்றிய கடமை அவருடைய திறமைக்கு எடுத்துக்காட்டாகும். சர்க்கார் இலாக்காக்கள் அவர் காட்டிய வழியைக் கண்டு பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். சுதேச சமஸ்தானங்களை இணைத்து அவர் இந்தியாவின் ஐக்கியத்தை நிலை நாட்டியதற்கு உதாரணமாக இந்திய சரித்திரம் வேறு சம்பவம் கூற முடியாது, தாய் நாட்டின் மதி வதனத்தை களங்கப்படுத்திவந்த 562-சமஸ்தான காயவடுக்கள் இன்று தேச படத்தில் காண முடியாது. சர்தாரின் இக்காரியம் ஒன்றையே பூவுலகமுள்ளவரை மறக்கமுடியாது. அதனல் இன்று இந்தியா பலம்பெற்ற ஐக்கிய நாடாய் விளங்குகிறது; மேலும் உள் நாட்டில் இருந்த பெரும் பலஹீனம் ஸமாப்தி யடைந்துவிட்டது,

சர்தார் பெரும்பாலும் கடுமையாய்ப் பேசக் கூடியவர். அதனலேயே 1947-ம் ஆண்டு பயங்கர காலத்தில் சிலருக்கு அவர்மீது சந்தேகமும் ஏற்பட்டது;

அவருடைய சில வாக்கியங்களால் சமாதான துரோகிகள் லாபமடையவும் முடிந்தது. ஆனால் அவருடைய இதய பரிசுத்தமானது. எவ்வித களங்கமும் காண முடியாதது என்பது திண்ணம் "சர்தார் கடுமையாய்ப் பேசக் கூடியவராயினும் பரிசுத்த இதயம் படைத்தவர்." என்று கூறி காந்திஜி அவருடைய குறையைச் சுட்டிக்காட்டினார்.

பிற்கால சம்பவங்கள் காந்திஜியின் இக்கூற்றை மெய்ப்பித்தனவென்பதையும், சிலருக்கு ஏற்பட்ட சந்தேகங்களை போக்கிவிட்டன வென்பதையும் யாவருமறிவர் ஆகவே விளக்கவேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறோம்.

வயது பொருத்தமட்டில் சர்தார்ஜியின் மரணம் அதிக துயரமளிக்கக் கூடியதில்லை எனினும், தேசத்திற்கு அவர் தொண்டு இன்னும் கொஞ்சகாலத்திற்கு அவசியமாகையால், அவருடைய நிரந்தரபிரிவு தேசத்தின் மாபெரும் நஷ்டமே. இன்று நாட்டில் நிலவும் கவலை மிகுந்த நிலைமையிலும், காங்கிரஸ் மகாசபைக் கேற்பட்டிருக்கும் சீரழிவு நிலைமையிலும், சர்தார்ஜியின் தலைமை மிக அவசியம். ஸ்ரீ ஜவஹர் கொள்கையை பூரணமாய் ஆதரித்ததோடு முதலாளிகளுக்கு நல்லவராயும், அவர்கள் அனுதாபத்தைக் கவர்ந்தவராயும், அவர்களை திருத்தக் கூடியவராயுமிருந்தவர் சர்தார் பட்டேல் ஒருவரே. ஆகவே சமூக துரோகிகளான முதலாளிகள் சர்தார் பட்டேலுக்கும், பண்டித நேருவுக்கும் இடையில் வேற்றுமை வளர்த்துச் சாதாரண அபிப்பிராய பேதத்தை, அடிப்படை வேற்றுமையாக்க பலமுறை முயன்றனர். ஆனால் சர்தார்ஜி அவர்கள் முகத்தில் கரி பூசிவிட்டார்."

நான் பண்டித நேருவின் தலைமையை பூரணமாய் ஆதரிக்கிறேன். ஆகவே அவரைப் பின்பற்றுவது என் கடமையாகும்" என்று கூறி சர்தார்ஜி அத்துரோகிகளின் தில்லுமல்லுகளுக்கு சாவு மணியடித்தார்

ஒளி மறைவின்றி வெளிப்படையாய் இவ்விதம் கூறியபின்பும், முதலாளி வர்க்கத்தினருக்கு அவர் மீதிருந்த அபிமானம் கிஞ்சிற்றும் குறையவில்லை என்பது ஆச்சரியமே. இதற்குக் காரணம் சர்தாரின் சிறந்த ஆற்றலும், விவேகமுமே. இன்று அன்னார் நம்மிடையில்லை. ஆனால் அவருடைய அரசியல் கொள்கைகள் இருக்கின்றன. அவருடைய வாழ்க்கையும் காரிய திட்டமும் நமக்குத்தெரியும். நாம் விரும்பினால் அவற்றால் பயன்பெறலாம். சற்றுக் கடுமையான சித்தம் படைத்தவராயினும் சர்தார் பட்டேல் அஹிம்சை, சத்தியாக்கிரகம் முதலியவற்றை நேசித்தார். காந்திஜியின் பரம பக்தராயிருந்தார். சர்தார்ஜி மறைந்த பின்பும் அவருடைய நெறியை தேசம் பின்பற்றுமாயின், சர்தார் மறைவால் நாம் அடைந்த துயரம் சற்றுக் குறைந்துவிடும். இல்லையெனில் நம் வருங்கால நிலைமை என்ன? என்பதை நாம் கூற விரும்பவில்லை,

---

இந்திய வட எல்லை.

நேருஜி பேருரை.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பூடானுக்கு அப்பால் 1914-ல் நிர்மாணிக்கப்பட்ட மேக் மாஹனின் எல்லை கோடும், லாடக் முதல் நேபாளம்வரை பன்னூறுண்டுகளாய் இரு நாடுகளிடையே இருந்த எல்லைக் கோடும், தெளிவாய் இருதரப்பாரும் அறிவித்ததே," என்று தெளிவாய் அறிவித்துள்ளார். இப்பிரச்னைகுறி கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்:-"சீனதேசப்படம் தற்சமயம் நம்வசம் இல்லை. கடந்த முப்பது ஆண்டுகளாய் வரையப்பட்டு வரும் சீனப்படங்களில் தற்சமயம் இந்திய பிரதேசமாயிருக்கும் சில பாகங்களை சீன பாகங்களாய் வரையப்பட்டுள்ளன, அப்பிரதேசங்கள் பெரும்பாலும் மலைப் பிரதேசங்களே. ஆகவே அங்கு ஜனத்தொகை மிகச் சொற்பம்" "என்று கூறினார். மற்றொரு கேள்விக்கு பதிலளிக்கையில்:-" நம் தேசபடங்களில் மேக்மாஹனின் எல்லைக்கோடு தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது. படமிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதுவே நம் எல்லை. நாம் அவ்வெல்லைக் கோட்டை ஏற்கிறோம். ஆகவே எவரும் அக்கோட்டை தாண்டிவர அனுமதியோம்," என்று சொல்லியிருக்கிறார்.

நேருஜியின் இவ்வறிவுப்பு சந்தர்ப்பத்தின் கடுமையை உணர்ந்து வெளியிடப்பட்டதாகும். ஆகவே செஞ்சீன யுத்த மனப்பான்மையின் காரணமாக சிலருக்கு ஏற்பட்டிருந்த தடுமாற்றம் இவ்வறிவிப்பினால் அகன்று விடுமென்பது நிச்சயம். சீனா — திபெத் விஷயம் இன்றுவரை சர்ச்சைக்குறியதாகும். ஆயினும் திபெத்மீது சீனமேலாதிக்கத்தை எவரும் மறுக்க முடியாது. ஆகவே திபெத் பிரதேசங்கள் சீன பிரதேசங்களே என்பதில் சந்தேகமில்லை. இக்காரணத்தாலேயே நேருஜி சீனதேச படத்தை பிரஸ்தாபித்தார். ஏனெனில் இவ்விஷயமாக சீன தலைவர்களுக்கு ஏதாவது சந்தேகமிருந்தால் போக்கிக்கொள்ள நேருஜியின் அறிவிப்பு ஹேதுவாகும்.

சீன யுத்த மனப்பான்மையையும், இமயத்திற்கு அப்பால் நடக்கும் சம்பவங்களையும் நாம் புறக்கணித்துவிட்டபோதிலும், தற்காலசர்வதேச நிலைமையும் அதன் போக்கையும் சிந்திக்காமலிருக்கமுடியாது. சீனாவையே

திரு நபி ஜனன விழா.

1912ல் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் கல்கத்தா வினின்றும் "அல்ஹிலால்" வார சஞ்சிகை வெளியிட்டார்.

அன்று இந்திய முஸ்லிம்கள் அரசியல் அரங்கில் பின்தங்கியிருந்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைப்பதும், சர்க்கார் காரியாலயங்களில் உயர் பதவிகளை வகிப்பதும் போன்ற கேடுகெட்ட கொள்கைகள் முஸ்லிம் இதயங்களில் குடிபுகுந்திருந்தன இஸ்லாமிய மதத்துடனும் அவர்களுக்கு உண்மைத்தொடர்பு இருக்கவில்லை. சர்வ கலாசாலைகளில் ஆங்கிலப்பட்டம் பெற்ற முஸ்லிம் வாலிபர்கள் இல்லாமைக் குறை கூறவும், பரிகசிக்கவும் முற்பட்டனர். ஆங்கிலப்பட்டதாரிகளல்லாதார் மத ஆர்வம் கொண்டிருந்தனராயினும், தொழுகை நோன்பு முதலிய ஆசாரங்களே இஸ்லாமின் முக்கிய கோட்பாடுகள் என்று கருதிவந்தனர்.

இத்தகைய அவல நிலையில் கல்கத்தாவினின்றும் "அல்ஹிலால்" ஆதித்தன் உதயமானான். புரட்சிகரமான அதன் அழைப்பு உலகத்தின் போக்கையே மாற்றியமைத்துவிட்டது "அல்ஹிலால்", சஞ்சிகை ஆரம்பித்த மௌலானா குரானிய சத்திய போதனையை மட்டும் விளக்கவில்லை; அவருடைய நடையும், அறியாமையால் இருளடைந்து கிடந்த இதயங்களை தட்டி எழுப்பக் கூடிய தெளிந்த உண்மை எடுத்தோதும் பாணியும், இந்திய அரசியலுக்கும், உர்து கலைக்கும் புத்துயிரூட்டி நவீன வழிகள் பல திறக்கச் செய்தன.

முஸ்லிம் சமூகத்தின் தலைமைத் தாங்கியிருந்த உலமாக்களும் (மதப்பெரியார்களும்) அல்ஹிலால் காட்டிய நெறியைப் பின்பற்றி அரசியலில் பிரவேசித்தனர்.

கீழ்கண்ட, 'திரு நபி ஜனன விழா", அல்ஹிலால் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட மௌலானாவின் ஓர் பிரசங்கமாகும். இக்கட்டுரையின் பல கவிதைகளையும், சில குர் ஆன் வசனங்களையும் நாம் விட்டுவிட்டோம். நபி பெருமான் ஜனனத்தின் நோக்கமென்ன? முஸ்லிம்களின் கடமை என்ன? என்பதை இக்கட்டுரை தெளிவாய் எடுத்துக் காட்டுகிறது இது பிரசங்கத்தின் ஓர் பாகமேயாயினும் மிக நேர்த்தியானது. ஆகவே நேயர்கள் இக்கட்டுரையை ஆழ்ந்து வாசிக்கவேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்.

சகமத நண்பர்களே!

ரபிஉல் அவ்வல் மாத வருகை உங்களுக்கு அளவிலா ஆனந்தம் ஊட்டுகிறது. ஏனெனில் அதன் முற்பகுதியிலேயே உலகில் எல்லையில்லா தெய்வகடாட்சம் தோன்றியதென்பதும், இஸ்லாமிய சத்திய போதகர் ஜனனத்தால் உலகத்தை பீடித்திருந்த விசனமும், துயரமும் தொலைந்தனவென்பதும் உங்கள் ஞாபகத்திற்கு வந்துவிடுகின்றன.

உங்கள் உள்ளங்கள் ஆனந்த உணர்ச்சியால் நிரம்பிவிடுகின்றன. உண்மையான தெய்வ தூதரிடம் நீங்கள் கொண்டுள்ள அன்பும், விசுவாசமும் உங்களுக்கு அடக்கமுடியாத ஆர்வமும், உற்சாகமும் அளிக்கின்றன. ஆகவே அவர் நினைவில் லயித்து புகழ்பாடி, கரைகாணா அன்பெனும் ஆனந்தசாகரத்தில் மூழ்கி உங்கள் கலை மனத்தையும் கழிக்க விரும்புகிறீர்கள்.

அன்னாரின் பெருமைகளை எடுத்தோத சபைகளைக் கூட்டுகிறீர்கள். அச்சபா மண்டபங்களை அலங்கரிக்க நீங்கள் கஷ்டப்பட்டுத் தேடிய செல்வத்தை வாரியிறைக்கிறீர்கள். மதுரமணம் பொருந்திய அன்றலர்ந்த பூச்செண்டுகளால் அவற்றின் அழகை பன்மடங்கு பெருகச் செய்கிறீர்கள். இவையனைத்தும் திருப்திகரமாய்ச் செய்தபின், ரம்மியமான புகழ் பாக்கள் இனிமையாய்ப் பாடி உங்கள் உள்ளத்தைக் கவர்ந்த அன்புக்குப் பாத்திரமான திரு நபியின் நினைவில் உள்ளத்தை லயிக்கச் செய்து, கண்ணீர் சிந்தி பெருமூச்சுகளினூடே அவ

எடுத்துக்கொள்வோம். நேற்றிலிருந்த அதன் நிலைமையும் அதன் போக்கையும் சிந்திக்காமலிருக்கமுடியாது. சீனாவையே எடுத்துக்கொள்வோம். நேற்றிருந்த அதன் நிலைமை என்ன? இன்று என்ன? நேற்றுவரை அமெரிக்கா அதனுடன் உறவாடிக்கொண்டிருந்தது. இன்றோ? பகை நாடுகளாயில்லையெனினும், வேறுபாடுகளுக்கு எல்லையுமுண்டோ? அதுபோல் நாம் யாரையும் விரோதிக்க விரும்பவில்லை. எல்லாருடனும் நேசமாயிருக்கவே விரும்புகிறோம். ஆனால் யாரும் நம்மிடம் பகைமைகொள்ளமுடியாது என்பதற்கு உத்தரவாதம் என்ன? இன்று நேசமாயிருக்கும் நாடு நாளை விரோதம் கொள்ளாது என்று கூறமுடியுமா? ஆகவே அண்டை நாட்டாருடன் நேசமாயிருந்துகொண்டே நம் எல்லைகளை பாதுகாக்கதக்கத் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். தக்க சமயத்தில் பிரதமர் நேருஜி அதைப் பற்றி தெளிவாய் எடுத்துக் கூறி நம் கவலையைப்போக்கிவிட்டார் என்பதில் நமக்கு பூரண திருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதேசமயம் இமயத்தின் உயரத்தில் நம் மக்கள் வைத்திருந்த தவறான நம்பிக்கையை தெளிவாக்கிவிட்டார் நம் தலைவர் நேருஜி.

திருநாமத்திடம் அளவிலா அன்புகொண்டு ஆத்மஜீவன் பெறுகிறீர்கள்.

மண்ணையும் விண்ணையும் படைத்த ரட்சகனின் அன்புக்குப் பாத்திரமானவரை, உங்கள் அன்புக்கும், விசுவாசத்திற்கும் தேர்ந்தெடுத்த உங்கள் உள்ளம் பெற்ற பேறு அளவிடவும் தக்கதா? தீர்க்கதரிசிகளுக்கு நாயனும் சர்வலோக வரப்பிரசாதம்போன்ற அன்னவர் புகழ் பாடும் நாவின் தூய்மையை வர்ணிக்கவும் இயலுமோ?

இறைவன் தன் பூரண அன்பு, நேசம் முதலிய வற்றால் பெருமைப்படுத்திய மஹானை, உங்கள் அன்புக்கும், நேசத்திற்கும் பாத்திரராய் தேர்ந்தெடுத்தது உங்கள் பெரும் பாக்கியமே. தேவன், அமரர், பரிசுத்த ஆத்மாக்கள், முக்தி பெற்றவர், நன்னெறி ஞானம் பெற்ற உத்தமர் முதலானோர் புகழும் உன்னத புருஷரின் புகழ் பாடுவதில் ஈடுபட்டுள்ளீர்கள்.

சிருஷ்டிகளில். சிறப்பு வாய்ந்த மஹான்

திருத்தூரிடம் நீங்கள் கொண்டுள்ள விசுவாசமும், அன்பும், ஆர்வமும், உங்கள் வாழ்வின் அரிய பொக்கிஷமென்பதில் ஐயமில்லை. ஆகவே அச்செல்வத்தை பாதுகாக்கவும், வளரச் செய்யவும், நீங்கள் எது செய்தாலும் குறைவே. உங்கள் அன்பு தெய்வீகமானது. உங்கள் பிரேமை சர்வரட்சகனிடம் கொண்டுள்ளதற்கு ஒப்பானது. உங்கள் விசுவாசம் மானிடவர்க்கத்தின் கதிமோட்சத்திற்கும், நன்னெறிக்கும், நேர்மைக்கும் பிறப்பிடமாகும். சர்வ புகழுக்கும் பாத்திரரென இறைவன் தேர்ந்தெடுத்த உத்தம மஹானிடம் நீங்கள் அன்புகொண்டிருக்கிறீர்கள். உலகமனைத்திலும், அன்பெனும் மணிமாலையணியத்தக்க பேறு பெற்றவர் அம் மஹானே. சிறப்புக்களுக்கு உறைவிடம், பிரேமையின் சிகரம் அவரே. ஓர் மானிடன் மற்றொருவரை புகழ்ந்து கொண்டாட செய்யும் யாவற்றிற்கும், மானிடவர்க்கத்தின் சிகரம், மானிடத்தன்மையின் உச்சநிலை போன்ற அவரே உரியவர் புகழுரைகள் அனைத்திற்கும் உரியவர் அவரைத் தவிர வேறெவருமில்லை.

இணையில்லா ஒருமை

ஈசனின் ரட்சகத்தன்மையும், தெய்வீகமும் இணையற்ற ஒருமை கொண்டதுபோல், பரிபூரண மனிதரான அம்மஹான் முஹம்மத் நபியின் மானிடமும், அடியார் என்னும் அந்தஸ்தும், ஈடும் இணையுமற்ற ஏகத்தன்மை வாய்ந்தது. அவர் மானிடத் தன்மையிலும், இறைவனின் அடியார் என்ற அந்தஸ்திலும், அவருடன் ஒப்பிடக்கூடியவர் யாருமில்லை மானிடத்தன்மையின் லட்சணங்கள் அனைவற்றுக்கும் அவரே உறைவிடமாவார்.

குர்ஆனில் நபிமார்களின் சம்பவங்களை வர்ணிக்கையில் அவரவர் இயற்பெயர்களே குறிக்கப்பட்டுள்ளன. அவர்களை அழைக்கும்போதும் பெயர்கள் சொல்லியே அழைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் மனிதத்தன்மைக்கே சிகரமாயமைந்தவரும் உயர்ந்த மனுவும் தெய்வபக்தியலங்கார பூஷிதை முகம்மத் நபியை குறிப்பிடுகையில் பற்பல சந்தர்ப்பங்களிலும் இயற்பெயரோ, அல்லது காரணப்பெயரோ கூறாது "அடியார்" அல்லது "தெய்வ பக்தர்" என்றே சர்வலோக ரட்சகன் குறிப்பிடுகிறான்.

"சுப்ஹானல்லஜீ" அல்லது "பனீ இஸ்ராயீல்" அத்தியாயத்தில்:—"தன் அடியாரை ஓரிரவில் மஸ்ஜிதேஹராமினின்றும் மஸ்ஜிதேஅக்ஸாவரை பிரயாணம் செய்வித்த இறைவன் (அல்லா) எத்தகைய தூய்மையானவன்".

"ஜின்" அத்தியாயத்தில்:—

"மேலும் தேவஅடியார் சத்திய பிரசாரம் செய்து இறைவனை அழைக்கையில் அவர்மேல் பாய்வதுபோல் சூழ்ந்துகொள்ளுகின்றனர்".

"கஹபு", அத்தியாயத்தில்:—

'தன்னடியார் மீது வேதத்தை இறக்கிவைத்த கடவுளுக்கே சர்வ பெருமைகளும் உரித்ததாகும்.''

''புர்கான்'', அத்தியாயத்தில்:—

''உலகமனைத்திற்கும் வழிகேட்டினின்றும் எச்சரித்து அச்சம் ஊட்டுவதற்கு தன் அடியார்மீது அல்புர்கான் (நன்மை—தீமையிடையே உள்ள வித்தியாசத்தை காட்டும் சத்திய ஒளி) இறக்கிவைத்த அல்லா மிகத் தூய்மையானவன்'', என்று கூறியுள்ளான்.

இதுபோல் "நஜ்ம்", "ஹதீத்" முதலிய அத்தியாயங்களிலும், நபிகள் நாதரை அவரது இயற்பெயருடன் குறிக்காது "அடியார்" என்றே அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிட்ட இடங்களன்றி பற்பல சமயங்களிலும் "அடியார்" என்ற முறையே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற தூதர்கள் சிலரும் அடியார் என்று அழைக்கப்பட்டிருக்கின்றனராயினும் கூடவே அவரவர் பெயரும் விளக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, "மரியம்" அத்தியாயத்தில் ஜகரிய்யா நபியும், "ஸாத்"தில் தாவூதும் அய்யூபும், அடியார் என்று அழைக்கப்பட்டதோடு கூடவே அவர்கள் பெயர்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வித தனிச்சிறப்புடன் நபிகள்நாதரை அழைத்துள்ளதற்குக் காரணம், அவரது உன்னத ஜன்மம் அல்லாவின் அடியார் என்பதிலும் தெய்வபக்தியிலும், மற்ற மானிடர்களால் அடையமுடியாத உன்னத அந்தஸ்தை அடைந்துவிட்டது என்பதே. வேறு எந்த பக்தருக்கும் அவருடைய இவ்வந்தஸ்தில் பங்கில்லை. அடியார் என்னும் முறையில் அவருக்கு ஈடுமில்லை இணையுமில்லை பரிபூரண அடியார் அவரே ஆகையால், அடியார் என்று கூறினால் சந்தேகமற அவரையே குறிப்பிடும்; ஏனெனில் படைப்புக்கள் யாவற்றிலும் அவர் போன்ற அடியார் வேறெவரும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதுதான் பற்பல விடங்களிலும் அடியார் என்ற முறையில் திரு தூதரை அழைத்திருப்பதற்கு முக்கிய நோக்கமாகும்.

இத்தகைய தெய்வீக புகழுரைகளுக்கு பாத்திரரான அவருடைய தேவ அடியார் என்னும் அந்தஸ்து, சிருஷ்டிகளனைத்தையும் முன்னேற்றத் தக்கதாகும் அவருடைய அன்பு, விசுவாசம் முதலியவற்றை விண்ணையும், மண்ணையும் படைத்த சர்வலோக ரட்சகனே எடுத்துக் கூறியுள்ளான் தன் ரட்சகத்தன்மை சர்வலோகங்களையும் எவ்விதம் ஒருங்கே ஆக்கிரமித்துள்ளதோ? அதேவிதம் நபி பெருமானின் காருண்யமும் அகில உலகையும் ஆகர்ஷிக்கக்கூடியது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறான் ஏக பராபரம். தன்னை அர்றஹீம் (தயாளனும், கிருபையுள்ளோனும்) என்று கூறியதுபோல் திரு நபியை—“பில்முஃமினீன ரஊபுர் றஹீம் (தெய்வ நம்பிக்கையுடையோர் அனைவருக்கும் அன்பனும், தயாளனும் ஆவார்) எனக்குறிப்பிடுகிறான். குர்ஆன் வேதத்தில் ஓரிடத்திலும் அவரை பெயர் கொண்டழைக்காது, சிலசமயம்“(யா அய்யுஹர் றசூல்)” ஓ! திருத் தூதரே” என்று மரியாதையாயும் வேறு சந்தர்ப்பங்களில் “யா அய்யுஹல் முஸ்ஸம்மில்” (கருப்பு கம்பளி போர்த்தியவரே) என்று காதல் கனிந்த மொழியிலும் அழைக்கிறான். தன்னைப் புகழ்வதுபோல், தன் தூதரையும் புகழ்வது மக்களின் முக்கிய கடமையாக்கி விட்டான். அவருக்கு மரியாதை செய்யுங்கள், அவரை உபசரியுங்கள் என்று பலவிடங்களிலும் உத்திரவு செய்திருக்கிறான். புனிதமான அம்மஹானின் அளவற்ற பெருமை ஒருபுறமிருக்கட்டும்—அவர் வாழ்ந்த நகரம், நடமாடிய தெருக்கள், முதலியவற்றின் சிறப்பையும் ஆண்டவன் அகில உலகும் அறியச்செய்துளான்.

“நாம் மக்காவின்மீது ஆணையிடுகிறோம் ஏனெனில் அதன் தரைமீதே தாங்கள் (அதாவது திருத் தூதர்) வாழ்ந்தீர்கள்”. (குர்ஆன்) இத்தகைய பெருமையும், புனிதமும் பெற்ற மகானின் நினைவில் காலத்தைக் கழிப்பதும், அவரிடம் காதல் கொள்வதும், அவரை நினைத்து கண்ணீர் சிந்துவதும், விம்முவதும், அவ்வுத்தமர் பெருமையை எடுத்தோதுவதும், இனிய குரலோடு புகழ் பாக்கள் பாடுவதும், மானிட ஜென்மத்தின் நோக்கம்; ஆத்மாவின் முக்தி; இதய பரிசுத்தம்; வாழ்க்கையின் உச்ச நிலை; தெய்வபக்தியின் சிறப்புமாகும்.

அடைந்தவற்றின் கொண்டாட்டம், இழந்தவற்றின் பிரலாபம்.

புனிதமான இம்மாதத்தைக் கொண்டாடும் பொருட்டு முடிந்தவையனைத்தும் செய்து, இம்மாதத்தில் ஜனனமானவரிடம் விசுவாசம்கொண்டு அடையும் ஆனந்தத்தின் ஊடே உங்களுக்கு உங்களுடைய துக்கமும் நினைவிருக்கிறதா? அத் துக்கமன்றி எதுவும் சந்தோஷமில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் நடத்தும் இக்கொண்டாட்டங்கள் எவர் பிறப்பின் நினைவு காரணமாய் செய்கிறீர்கள் என்பது தெரியுமா? தான் ஜனித்து உங்களுக்கு அளவிலா ஆனந்தமளிக்கும் உத்தமர் யார்?

அந்தோ! உங்களுக்கு உலக பரலோக செல்வங்கள் அனைத்தையும் அளித்தவர் இம்மாதத்தில் தோன்றினார் என்பதால் இம்மாத வருகை உங்களுக்கு கரைகாணா இன்பம் அளிக்கிறதென்றால், எனக்கு இதைத் தவிர வேறெந்த மாதமும் அளவிலா துயரம் அளிக்கக் கூடியதல்ல. ஏனெனில் இம்மாதத்தில் தோன்றிய வள்ளல் அளித்த யாவற்றையும் நாம் தொலைத்துவிட்டோம். இம்மாதம் ஒருபுறம் அவர் தோற்ற நினைவின் ஆனந்தம் அளிக்கிறதென்றால், மறுபுறம், யாவற்றையும் இழந்ததால் நம் இதயங்களில் உண்டாகிய புண்களும் இரத்தம் சிந்த முற்படவேண்டும்.

சபைகளைக் கூட்டி அலங்காரம் செய்து பல இன்ப கீதங்களால் அவற்றை ஜீவனளிக்க விரும்பும் உங்கள் இதயங்கள் ஜீவனற்று கிடக்கும் துக்ககரமான நிலைமை நினைவாகிறதா? மின்சார விளக்குகளால் சபாமண்டபங்களை பிரகாசிக்கச் செய்யும் உங்களுக்கு உங்கள் உள்ளத்தைச் சூழ்ந்துள்ள இருளை நீக்க ஓர் தீபம் கிடைக்கவில்லையா? அன்றலர்ந்த பூச்செண்டுகளைத் தேடியலைகிறீர்கள். ஆனால் உங்கள் நல்லொழுக்க, நற்கரும மலர் வாடிவிட்டதே. ரோஜா அத்தரால் உங்கள் ஆடைகளை பரிமளிக்கச் செய்கிறீர்கள். ஆனால் இஸ்லாமியப் பெருமையின் தூய மணம் உலக ஆத்மாவை விட்டு நீங்கிவிட்டதே. அந்தோ! உங்கள் அறியாமையை என்னவென்று சொல்லுவது. நீங்கள் கூட்டும் சபைகள் இருண்டு;—உங்கள் மாடமாளிகைகளுக்கு சிங்காரத்தின் ஒரு சிறு பகுதியும் கிடைக்காமல், அலங்காரமற்று அவலட்சணமாயிருந்து; — இம்மாதத்தில் தோன்றிய மஹானின் புகழுரை ஒன்றும் உங்கள் வாய் கூறு

திருந்து;—உங்கள் வாயால் அவர் பெருமையை யாரும் கேட்கமுடியாது போய்;—ஆனால் உங்கள் ஆத்மா ஞான சூன்யமாயில்லாது;—உங்கள் இதயக் கோயில் பாழாகா திருந்து; — துயில்கொள்ளும் உங்கள் விதி விழித் தெழுந்து; — உங்கள் சொற்களிலல்ல, நல்லொழுக்க வாழ்வின் ஒவ்வொரு செயலிலும், நபி பெருமானின் புகழ் பாக்களின் இனிய நாதம் எழும்பியிருந்தால் போதுமே.

அந்தோ! 'தன் வாழ்வின் ஒவ்வொரு ஆனந்தத் திலும் துக்கத்தைத் தேடிக்கொண்டதும், கொண்டாட் டத்திலும் திண்டாட்டத்தை வருவித்துக்கொண்ட சமூகத்தின் மறதியையும் அறியாமையையும் கண்டு நம் இதயம் துடிக்கின்றதே. கடந்தகால வாழ்வில் தற்கால வாழ்வின் தவறுகளைத் திருத்தக்கூடிய எவ்வித உணர்ச்சி யும், வருங்கால வாழ்வின் இருளை நீக்கி வெளிச்ச மளித்து முன்னேற உதவும் எவ்வித விளக்கும் இவ்வகுப்பாரிடம் இல்லையே கடந்தகாலத்தில் அவர்களுக்கு கிடைத்த வெற்றிகளையும், உன்னத அந்தஸ்தையும் நினைந்து, சந்தோஷம் கொண்டாடுவதில் தங்கள் காலமனைத்தையும் கழிக்கின் றனர். கண்கள் பார்வை யிழந்துவிடவில்லை யானால்—காதுகள் கேட்கக் கூடுமாயின்—அறியாமை யும் மறதியும், அறிவை கொள்ளைகொண்டுபோகவில்லை யானால்—ஒவ்வொரு ஆனந்த சம்பவத்திலும் துக்கமும், துயரமும் அளிக்கத்தக்க சம்பவங்கள் மறைந்து கிடப் பதை உணரலாம்.

ஜனனமும், அதன் நோக்கமும்

தன் ஜனனத்தால் உலகத்தின் பீடைகள் அனைத் தையும் தொலைத்து நம்பிக்கை அளிக்கும் வசந்தத்தை உண்டாக்கி; — கொடுமை, அனாச்சாரம், குழப்பம், பாபம் முதலியவற்றின் இருளை நீக்கி, உலகத்தை தெய்வ நம்பிக்கை என்னும் பிரகாசத்தை அளித்து;—முறிந்து போன மானிட—இறைவன் உறவை மறுபடியும் நிலை நாட்டி;—சகோதரத்துவம், விட்டுக்கொடுக்கும் மனப் பான்மை நிலைக்கச் செய்து;—மானிடரிடையே மலிந் திருந்த வேறுபாடுகள், பகைமை முதலியவற்றை விரட்டியடித்து;—நாஸ்திகம், வழிகேடுகளின் துர் அதிர்ஷ்டம் தொலைந்து; நேர்மையும், நியாயமும் மீண்டு சத்திய ஆட்சி ஸ்தாபித்த கிருபாகடாட்சம் மிக்க தெய் வீகப் பிரகடனம் தோன்றிய மாதம் என்ற காரணத்தா லேயே இம்மாத வருகை நமக்கு ஆனந்தமும் சந்தோஷ மும் அளிக்கும் ஸ்ரீமுகமாகும். சத்திய வேதவாக்கு மீண்டது இம்மாதமே.

"நல்வழி காட்டும் பிரகாசமும் தெளிவான வேத வாக்கும் அல்லாவின்பால் உங்கள் பேரில் இறக்கப்பட் டது. அல்லாவின் சம்மதத்தை நாடுபவர்களுக்கு அதன் மூலம் வாழ்க்கைத் துறையின் சகல வழிகளை யும் திறந்து, நல்வழிகாட்டி அடைக்கலமளிக்கிறான் அல்லா". (குர்ஆன்)

ஆனால் இன்று உலகம் மறுபடியும் அவநம்பிக்கை, கொடுமை, முதலியவற்றால் பீடிக்கப்பட்டு வருத்தமுறு கிறது. மானிடன் புரியும் கொடுமை, குழப்பம், அனாச் சாரம் முதலியவற்றின் இருள் சத்திய ஒளியை தோற் கடிக்க நாற்புறமும் சூழ்ந்துகொண்டிருக்கிறது. சத்திய விருட்சம் பட்டுப்போய்விட்டது. வழிதவறிய மானிட கூட்டத்தைக் காப்பாற்றுகிறவர் எவருமில்லை. கடவு ளுக்குரிய மாநிலம் இதரர்களிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது. அவனுடைய சத்தியவாக்கினிடம் அன்பு கொண்டவர்கள் இவ்வுலகில் இல்லாது போய்விட்டனர்.

"பூலோகத்தில் நிலம், நீர்ப்பரப்பு இரண்டிலும் மானிடனின் தீச்செயல்களால் குழப்பம்பரவிவிட்டது. உலகத்தின் க்ஷேமமும், கதிமோட்சமும் பாழாகிவிட் டன". —(குர்ஆன்)

அந்தோ! நீங்கள் அவர் வருகைக்காக சந்தோஷம் மட்டும் கொண்டாடுகிறீர்கள்; ஆனால் அவர் தோற்றத் தின் நோக்கத்தை புறக்கணித்துவிட்டீர்கள். அவர் எந்த நோக்கம் நிறைவேற்ற தோன்றினாரோ, நீங்கள் அதை நினைக்கவோ, அதன் நிறைவேற்றத்தைக் கருதவோ யில்லை

இந்த மாதம் உங்களுக்கு அளவிலா ஆனந்தமளிக் கிறதென்றால் அதற்குக் காரணம் உலகத்தைப் பீடித் திருந்த வழிகேடெனும் இலையுதிர்காலம் முடிவுற்று சத்திய வேத வாக்கின் வசந்தகாலம் வந்ததென்பதே. பின் இன்று உலகத்தில் நேர்மை விருட்சம் வழிகேட டினும் நச்சுக் காற்றால் பட்டுப்போயிருக்கையில், அறியா மைப் பித்தர்களே! வசந்தத்தின் நினைவில் ஆனந்தம் கொண்டாடும் நீங்கள், இலையுதிர்காலத்தின் அழிவை நினைத்தும் கண்டும் கண்ணீர்வடிக்காததேனோ?

தீ எனும் மார்க்க நெறி

ஸயீர் மலைமீது தௌராத் வேத போதகருக்கு அறிவிக்கப்பட்ட "தீ எனும் மார்க்க நெறி", பாரான் மலைமீது தோன்றியதாலேயே இப்பருவம் சந்தோஷ மூட்டக்கூடியதாயிற்று. கொடுமைக்காளாகி பெரு மூச்சுக்கள் விடவும், ஆதரவற்று கண்ணீர் வடிக்கவும், அவமரியாதையாய் உதைபட்டு வெளியேறவும், அம் மார்க்கநெறி தோன்றவில்லை. ஆனால் சத்தியத்தின் எதிரிகள் அபஜயமடைந்து கண்ணீர் வடிக்கவும், தேவ னைப் பகைப்பவர்கள் ஆதரவற்று கிடக்கவும், வழி கேடும், கொடுமையும் அபஜயமடைந்து உதைபட்டு வெளியேறவும், சத்தியம், நேர்மை முதலியவற்றின்

தெய்வீக சிம்மாசனம், பூரண லட்சணங்களுடன் ஜகச்சோதியாய் வெற்றிச் சின்னங்கள் கண்ணைப்பறிக்க, உலகமனைத்திலும் தன் தூய்மையான ஆட்சியைப் பிரகடனப்படுத்தவே அம்மார்க்கநெறி தோன்றியது. ஆகவே, அது பொய்மையை நடுங்கச் செய்து, வேத வாக்கின் ஆட்சியை நிலைநாட்டி, நிரந்தர வெற்றியின் சந்தோஷத்தை அளிக்கும் தெய்வீக வாள் போன்றதாகும்.

"உலக நல்வழி நிலைபெறவும், வழிகேடுகள் தொலையவும், சத்தியமார்க்கத்துடன் உலகில் தன் தூதரை அனுப்பி, சமயங்கள் அனைத்தின் மீதும் ஜயம் பெறச் செய்தவன் அந்த இறைவனே. ஆகவே அவருடைய சத்திய சக்தியே நிரந்தரமானதும், பொது வெற்றிபெறக்கூடியதுமாகும். தெய்வத்தைக்கொண்டு இணைவைப்பவர்களுக்கு அவ்விதம் நிகழ்வது விரும்பத்தகாதது ஆயினும் நிகழ்ந்தே தீரும்". —(குர்ஆன்)

அவர் அவமரியாதை ஏற்படுத்திய காயமல்ல;— ஆனால் தோல்வி ரணத்தையுண்டாக்கும் கரமாகும்; கொடுமையால் தோன்றும் துடிப்பல்ல — கொடுமையாளர்களை துடிக்கச் செய்யும் வாளாகும்; ஆதரவின்மையால் ஏற்பட்ட தவிப்பல்ல—உலகத்தை தவிக்கச் செய்தவர்கள் அவரால் தவிக்க நேர்ந்தது; துக்கமும், துயரும் அளிக்கும் பதட்டமல்ல—துக்கமும் துயரும் உண்டாக்கி உலகமக்களை துடிக்கச் செய்தவர்களுக்குக் கிடைத்த முட்படுக்கையாகும்.

அவர் கொணர்ந்தவற்றில்—துக்கத்தின் பிரலாபம் —துயரத்தின் பெருமூச்சு—அசக்தியின் விரக்தி—நிராசையின் கண்ணீர் இருக்கவில்லை. ஆனால் பரிபூரண ஆனந்தமளிக்கும் ஆர்ப்பாட்டம்—நோக்க நிறைவேற்றத்தின் கொண்டாட்டம்—வெற்றியும், சௌஜன்யமும் அளிக்கும் வசந்தம் — நம்பிக்கை அளிக்கும் உறுதியின் புன்முறுவல் — சக்தியும், ஆதிபத்தியமும் அடையும் உயர் அந்தஸ்து—பரிபூரண வெற்றிபெறும் வாழ்வின் அழகிய வதனம்—நிரந்தர ஜயத்தின் ஸ்ரீமுகம் —முடிவிலா ஆனந்தமளிக்கும் மஹாசக்தி — முதலியவற்றின் பிறப்பிடமாகும்.

"உலகத்தின் சகல சக்திகளையும் விட்டொழித்து அல்லா ஒருவனே நமது ரட்சகன் எனக்கூறி, அவனைத்தவிற வேறில்லை என்பதை உறுதி செய்து, தடுமாற்றமின்றி தெய்வ வணக்கத்தை நிலை நாட்டிய உத்தம அடியார்கள். நோக்கம்நிறைவேறவும், வெற்றி பெறவும். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவராவர். ஒவ்வொரு சமயமும் வெற்றியின் நற்செய்தியளித்து; உங்களுக்கு பயமோ நிராசையோ இல்லை; உலக வாழ்விலும் நீங்கள் தேவனின் உதவியாலும், அருளாலும் வெற்றிபெருவீர்கள்; மறுமையிலும் இறைவனின் தயவால் நோக்கத்தில் வெற்றி காண்பீர்கள்; அல்லாவின் பூரண அன்பளிப்புக்களும் உங்களுக்கே; நீங்கள் விரும்பும் அன்பளிப்பைப் பெறுவீர்கள்; நீங்கள் விரும்புபவை தயாரா யிருப்பதைக் காண்பீர்கள்:— என்று கூறும் அமரர்களை அவர்களிடம் கடவுள் அனுப்பிவைப்பார்," (குர்ஆன்)

அவநம்பிக்கையும், வருத்தமும் கொள்ளவேண்டாம்

வெற்றியளிப்பவரின் உறவுகொள்ளாதவர்களே தோல்வியும், துக்கமும் அடைவர் என்று இம்மாதத்தில் தோன்றியவர் கூறியிருக்கிறார். ஆனால் உலக சக்திகள் அனைத்தையும் எதிர்த்து, தூயதேவனின் சக்திக்கு விசுவாசிகளாக்கி, சந்தோஷங்கள் அனைத்தையும் அளிப்பவனும், வெற்றிகள் யாவற்றின்உற்பத்திஸ்தானமுமான கடவுளை தமது நேசனாய் பாவிப்பவர்கள் எவ்விதம் துயருர முடியும். இப்பூவுலகில் தெய்வ பக்தர்களை பகைப்பவர் யார்?

'ஏனெனில்ஆண்டவன் அவனை நம்பியவர்களின் நேசனும் ஆதரவுமாவான். ஆனால் அவனை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களான நாஸ்திகர்களுடையவனல்ல' (குர்-ஆன்)

தெய்வீக உண்மையையும், சத்திய வேதவாக்கையும், நியாயத்தையும் நிலைநாட்டும் தொண்டுபுரிய தங்களையே அர்ப்பணித்துள்ள பரிசுத்த ஆத்மாக்கள் யாருக்கும் அஞ்சுவதில்லை. ஆனால் அவர்களைக்கண்டு உலகமே நடுங்கும்.

"நீங்கள் உண்மை முஃமின் (நம்பிக்கைகொண்டவர்)களாயின் கடவுளுக்கு பயப்படுங்கள்; சத்தியத்தை எதிர்க்கும் பேய்ச்சக்திகளுக்கு அஞ்ச வேண்டாம்" (குர்-ஆன்)

உலகில் பரஸ்பரம் முற்றிலும் முரண்பட்டவை ஒன்றாய் சேரமுடியும்; நெருப்பும், நீரும் ஒரேயிடத்தில் ஒன்றாயிருக்க முடியும்; புலியும் ஆடும் ஒரே துறையில் நீரருந்துவதும் சாத்தியப்படலாம்; ஆனால் இறைவனிடம் கொண்ட நம்பிக்கையும்—மானிடப்பிறவிகளிடம் அச்சமும் ஒரே இருதயத்தில் ஒன்றாய் குடிபுக முடியாத முறணனவையாகும். மதிகெட்ட ஒருவன் தான் ஆண்டவனிடம் நம்பிக்கை கொண்டிருப்பதாய்க்கூறி, அதேசமயம் மனிதப் பிறவிகளிடம் கொண்ட அச்சத்தால், நடுங்குவானாயின், முன்னேறவிடாது வழியில் கிடந்து முட்டுக்கட்டையிடும் கற்களென மதித்து, அவனை காலால் உதறித்தள்ளுங்கள். ஏனெனில் அவன் தெய்வ நம்பிக்கையில் உறுதியற்றவன்.

"அவநம்பிக்கையும், வருத்தமும் கொள்ளவேண்டாம். உண்மை முஃமின் (தெய்வநம்பிக்கைக்கொண்

டவர்) களாயின் நீங்கள் யாவர்மீதும் வெற்றியடையக்கூடியவர்கள்'' (குர்-ஆன்)

"இறைவனிடம் நேசம்கொண்டு அவனை நாடுபவர்களுக்கு எவ்வித அச்சமுமில்லை., வருந்தவும் மாட்டார்கள், என்பதை நினைவுறுத்திக் கொள்ளுங்கள்'' (குர்-ஆன்)

பாக்கியம் பறிக்கப்பட்டதேன்?

ஆனால் இன்று திருத்தூதர் ஜனன விழா கொண்டாடக்கூடும் உங்கள் நிலை என்ன? உங்களுக்கு அளிக்கப்பட்ட அந்த செல்வம் எங்கே? நீங்கள் பெற்றிருந்த பரிபூரண வெற்றியளிக்கும் பாக்கியம் எங்கு சென்றுவிட்டது? உங்கள் ஆத்மஜீவன் உங்களை விட்டுச் சென்றுவிட்டது ஏன்?.........அந்தோ! உங்கள் இறைவன் உங்களைப் புறக்கணித்து விட்டது ஏன்? "தன் அன்பினால் பிணைக்கப்பட்டவர்களாய்'' உங்கள் எஜமானன் ஏன் உங்களை வைத்திருக்கவில்லை? உலகத்தில் கீர்த்தியும் பெருமையும் உங்களுக்கே என்று இந்த மாதத்தில் தோன்றியவர் வாக்களிக்க வில்லையா? அச்செல்வத்தைப் பெறத் தக்கவர் இவ்வுலகில் உங்களைத் தவிர வேறு யாருமில்லை என்று அவர் அறிவிக்கவில்லையா?

'இறைவன், அவனுடைய தூதர். தெய்வ நம்பிக்கை கொண்டவர்கள் ஆகியோருக்கே பெருமை உண்டு. இதயம் குழம்பிக் கிடப்பவர்கள் இவ்வுண்மையை அறியமாட்டார்கள்'' (குர்ஆன்)

பின் இந்த மாறுதல் ஏன்? நீங்கள் இகழப்படத் தக்கவர்களானதேன்? கீர்த்தியும், பெருமையும் உங்களை விட்டுச் சென்றதற்கு காரணம் என்ன? தெய்வ ஆதரவைப்பற்றியளிக்கப்பட்ட உத்தரவாதம் உங்களுக்கு அறிவிக்கப்படவில்லையா? அதாவது:-

"முஸல்மான்களுக்கு ஜயமளிப்பது நமதுகடமையாகும் அன்னியர்கள் வெற்றியடைந்து, தெய்வநம்பிக்கைக் கொண்டவர்கள் தோல்வியடைவது முடியாத காரியமாகும்'' (குர்ஆன்)

பின் நீங்கள் ஜயமடையாதது ஏன்? வெற்றியும் கீர்த்தியும் உங்களுடன் உறவு கொள்ளாததற்கு காரணம் என்ன? இறைவன் அளித்த வாக்குறுதி பொய்யா? கேவலம் மானிடர்கள் அளிக்கும் உத்தரவாதத்தை நம்பும் நீங்கள் "உங்கள் ரட்சகன் தானளித்த உத்தரவாதத்திற்கு மாறுசெய்பவனல்ல. என்ற உறுதிமொழியை நம்பாததேனோ? அந்தோ! அவனளித்த உத்தரவாதம் பொய்யுமல்ல. - அவன் உங்களுடன் கொண்டிருந்த உறவை அறுத்துக்கொள்ளவுமில்லை- ஆனால் யாவற்றுக்கும் காரணம் நீங்களே, உங்கள் விசுவாசதுரோகம்-நீங்கள் செய் நம்பிக்கைமோசம் -சத்தியத்தை விட்டொழித்த உங்கள் துர்ச்செயல், முதலியவை நீங்கள் கடவுளிடம் கொண்டிருந்த உரவை அறுத்து விட்டன. உங்கள் மறதி. ஒழுக்கக்கேடு, மானிடப்பிறவிகளிடம் நீங்கள் கொண்டுள்ள பக்தி. அடிமைத்தனம் முதலிய துர்ச் செயல்களால் ஆண்டவனின் தூய உறவுக்கு களங்கம் உண்டாக்கிவிட்டீர்கள்.

:"ஏனெனில் ஒரு சமூகம் தன்னைத்தானே மாற்றியமைத்துக் கொள்ளாதவரை, அச் சமூகத்தாரின் பாக்கியத்தை பரித்து, அவரிலேக்கு ஈசன் கொணர்வதில்லை. குற்றமில்லாதபோது தன் அடியார்களை தண்டிக்க கூடிய கொடுமைவாய்ந்தவன் ஆண்டவனில்லை'' (குர்ஆன்)

நீங்கள் அந்நியர்களுக்காகவன்றி அவனுக்காகவே இருக்குறீர்களென்றும் இன்று இறைவனும் உங்களுக்காகவே யிருககிறான்.

"நீங்கள் இரைவனின் சத்தியவேத வாக்குக்கு உதவி புரிவீர்களாயின் அவனும் உங்களுக்கு உதவி, உள்ளத்தில் உறுதியுண்டாக்கி, நிலைத்து நிற்கச்செய்வான்'' (குர்ஆன்)

சுதந்தர ஞாபகார்த்தம்

இம்மாதத்தில் தோன்றியவரிடம் நீங்கள் அன்பு கொண்டு, அவரை நினைப்பதாய்ப் பெருமை கொள்கிறீர்கள்; சபாமண்டபங்களை அலங்கரித்து இனிமையான புகழ்பாக்களின் நாதம் ஒலிக்கச் செய்கிறீர்கள்; ஆனால் நீங்கள் பிரேமைக்கொண்டிருப்பதாய்க் கூறும் அன்னவரை முற்றிலும் மறந்துவிட்டீர்கள் என்பதை உங்கள் செயல் ஒவ்வொன்றும் சந்தேகமற எடுத்துக் காட்டுகிறது. நீங்கள் இனிமையான புகழ்பாக்கள் பாடும் அவருடைய பெருமையை உங்கள் ஜன்மமே களங்கப்படுத்துகிறது. மானிட வாக்கத்தை மனிதர்களின் அடிமைத் தனத்தினின்றும் விடுவித்து ஆண்டவனின் அடிமைகள் என்ற நேர்மையான சத்திய மார்க்கத்தில் உங்களை முன்னேற்றவே அவர் தோன்றினார். மக்கள் தங்கள் கழுத்தைச்சுற்றி ஏற்படுத் கொண்ட எண்ணற்ற தலைகளை அறுத்தெரிந்து மானிடன் தேவனின் அடிமை என்ற ஒரே பந்தத்தில் உங்களை பிணைத்துவிடுவதற்கே இம்மாதத்தில் தோன்றியவர் இவ்வுலகத்தில் காட்சியளித்தார்.

"கட்டுப்பாடுகள், அடிமைப் பந்தங்களின்றும் மானிடரை விடுவிக்கவும், அவர்கள் தங்கள் கழுத்துக்களைச் சுற்றிக்கொண்ட சங்கிலிகள் அனைத்தின் பிடியினின்றும் விடுவிப்பதே இஸ்லாமிய போதகர் தோற்றத்தின் நோக்கமாகும்'' (குர்-ஆன்)

ஒருவனைத்தான் கீழ்ப்படியலாம்; அந்த ஒருவனே ஆளவும், கட்டளையிடவும் உரியவன் என்று இம்மாதத்தில் தோன்றிய உத்தம தூதர் கூறியிருக்கிறார்.

"ஆட்சியும், சக்தியும் இறைவனைத் தவிற வேறெவருக்கும் உரியனவல்ல'' (குர்-ஆன்)

மானிடன் இழந்து விட்ட சுதந்தரத்தை முதற் காரியமாய் அவர் மீட்டுத் தந்தார். மனிதன் அரசர்களின் அடிமையாயிருக்கவோ, பூசாரிகள் ஜோசியர்களுக்குக் கீழ்ப்படியவோ மற்ற எந்தமனித சக்திக்கு உட்படவோ தோன்றவில்லை, அவன் தலை வணங்குவதற்கு ஒரே சன்னதி; அவன் இதயத்தை ஆக்ரமிக்கத் தக்கது ஒரே பிரேமை; அவன் உடலை கட்டுப்படுத்தக்கூடியது ஒரே சங்கிலிதான் என்று கூறினார் ஆகவே அவன் கீழ்படிவது அந்த ஒருவனுக்கே; அவன் கதறுகிறானென்றால் அவன் முன்னிலையிலேயே; நம்பிக்கை கொள்கிறானென்றால் அந்த ஒருவன் மீதே. அஞ்சி நடுங்குவதும் அந்த ஏக நாயனை அஞ்சியே; விசுவாசமும் அந்த ஒருவனிடமே கொள்கிறான். ஆண்டவனிடம் கொள்வது போல் மற்றவரிடமும் பயங்கொள்பவன் முஃமின் (தெய்வநம்பிக்கைகொண்டவன்) அல்ல.

"வணங்கவும், அடிமைப்படவும் பல எஜமானர்களை ஏற்படுத்திக்கொள்வது நல்லதா? அல்லது சினம் மிக்க ஏகநாயகனை ஏற்படுத்திக்கொள்வது சிறந்ததா? இன்று நீங்கள் கீழ்படிவதற்காக சிருஷ்டித்திருக்கும் பல பீடங்கள் நீங்களும், உங்கள் மூதாதையரும் அறியாமையினால் பல பெயர்களிட்டு ஏற்படுத்திக் கொண்டதன்றி வேறென்ன? நெடுங்காலப் பழக்கத்தினால் அவற்றிடம் உங்களுக்கு பயபக்தி ஏற்படுகிறது. கடவுள் அவற்றிற்குச் சக்தியோ, வணக்கத்திற்குப் போதுமான அந்தஸ்தோ அளிக்கவில்லை. அதற்கு கட்டளையும் இடவில்லை. உங்கள் கையாலும், சிந்தனையாலும் தோன்றியுள்ள செயற்கை எஜமானர்களிடம் ஒன்றுமேயில்லை, என்பதை நம்புங்கள். கட்டளையிடவும் ஆளவும் தக்க சக்தி உலகில் இல்லை. அது இறைவனுக்கே உரியது. தன்னைத்தவிர வேறெவரையும் வணங்கவேண்டாமென்று அவன் உத்திரவிட்டுள்ளான். இதுதான் மானிட இயல்புக்கு ஏற்ற மார்க்கம். ஆகவே இயற்கை மார்க்கமாகும்". (குர்ஆன்)

அவன் மானிடனின் உண்மை சுயேச்சையையும், சுதந்திர உரிமையையும், நற்புத்தி புகட்டும் பல உதாரணங்களால் விளக்கியுள்ளதைப் பாருங்கள்.

"அல்லா ஓர் உதாரணம் கூறுகிறான். ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் அடிமையாயிருக்கிறானென்று வைத்துக்கொள்ளுங்கள். அவனுக்கு எவ்வித அதிகாரமுமில்லை அவன் சொந்த பொருள்களாயினும் அவற்றின்மீது அவனுக்கு எவ்வித உரிமையும் இல்லை. அவன் தன் எஜமானனின் உத்திரவுகளுக்கு உட்படும் வெறும் அடிமையே. ஆனால் அவனுக்கு நேர்மாறாக ஓர் சுந்தர புருஷனும் இருக்கிறான். அவனை யாரும் ஆளுவதில்லை. அவன் தன் உடமைகள் அனைத்தின் மீதும் ஆதிபத்தியமும் உரிமையும் கொண்டுள்ளான். இறைவன் அளித்துள்ளவற்றை மறைமுகமாகவும், வெளிப்படையாயும் எவ்வித தடையுமின்றி செலவிடுகிறான். இந்த இருமனிதர்களும் ஒரேவிதமானவர்களா? இருவருடைய நிலைமையிலும் வித்தியாசமில்லையா? வித்தியாசம் இருக்கிறதென்றால், இறைவனைத்தவிர வேறு எஜமானரைக் கொள்ளாதவனும்—தன் கழுத்தின்மீது மானிடரின் ஆதிபத்திய அடிமைத்தளைகளை அணிந்துள்ளவனும்எவ்விதம்ஒரேவிதமானவராவர்".

— (குர்ஆன்)

ஆகவே இம்மாதம் உலகத்தவருக்கு ஆனந்தமளிக்கக்கூடியதென்றால், முஸல்மான்களுக்கு அளவிடமுடியாபாக்கியமான "இறைவனின் அடிமை—மானிடரின் எஜமானன்", என்ற செல்வத்தை அளித்து, பூலோகத்தில் அவர்களை தேவப்பிரதிநிதி என்ற பட்டம் சூட்டி, ஆண்டவனின் தூயவரப்பிரசாதம் என்ற உயர்பதவியை அளித்த மாபெரும் மனிதன் தோன்றினான் என்பதே காரணமாகும். ஆகவே இம்மாதம் சுதந்திரம் பிறந்த மாதமும், அடிமைத்தனத்தின் மரணம், அழிவு முதலியவற்றின் ஞாபகச் சின்னமும் ஆகும் தேவப் பிரதிநிதித்துவம் அருளப்பட்ட முதல் தினம்; பூலோக ஆட்சியின் வாரிசுத்தன்மை அளிக்கப்பட்ட பிரகடனமும் ஆகும். இம்மாதத்தில் தான் சத்தியவாக்கு உயிர்பெற்றெழுந்தது. இதில் தான் கொடுமை—குழப்பம், நாஸ்திகம்—வழிகேடு முதலியவற்றால் தோன்றிய சாபத்தினின்றும் உலகத்திற்கு விடுதலை கிடைத்தது.

ஆனால் துரதிருஷ்டமே! விடுதலையளித்த மாதத்தின் சந்தோஷத்தைக் கொண்டாடும் நீங்கள்! இம்மாதம் உங்களுக்கு சந்தோஷமளிக்கவே வந்துள்ளது போல், கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்யும் நீங்கள்; தூய்மையும், பரிசுத்தமுமான இந்த ஞாபகார்த்தத்தைக் கொண்டாட உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறதென்பதை எனக்குத் தெரிவியுங்கள். மரணமும், அழிவும்—வாழ்வையும், ஆத்மாவையும் தமது சகாவாகக்கூற உரிமையுண்டா? மாண்டு நாரிய பிணம் ஒன்று, உயிருள்ளவர்களைப்போல், வாழ்வைக் கொண்டாட முற்பட்டால் உலக அறிவு அதைப் பார்த்து இகழாதா? சூரிய பிரகாசம் உலகத்துக்கு அளவிலா ஆனந்தம் அளிக்கவல்லது என்பது உண்மையே. ஆனால் சூரிய உதயத்தை கண் பார்வை உள்ளோர் கொண்டாடுவதுபோல் குருடனும் கொண்டாடுவது பொருந்துமா?

நீங்கள் யார்? என்பதைக் கூறுங்கள். நீங்கள் — மனப்போக்கு, இச்சை, ஆசை, உலக சக்திகள் முதலியவற்றிற்கு அடிமையாகிக் கிடக்கும் ஒரு மந்தைதானே; தானே நகர சக்தியற்றதும், உயிரும் ஆத்மாவும் இல்லாததும், பிளந்து தூள்தூளாக மட்டும் கூடியதும் ஒன்றுடன் மற்றொன்று மோதிக்கொள்ளத்தக்கதும், வீசியெறியக்கூடியதுமான ஒரு கற்குவியல்தானே; காற்று அடித்தாலன்றி தன் இடத்தை விட்டு நகராது. வழிப்போக்கரின் காலடியில் மிதிப்பட்டுக்கிடக்கும் மட்புழுதிதானே.

ஓ! மறதிக்கு உறைவிடங்களே! உணர்ச்சியற்ற உறக்கத்தின் பிறப்பிடங்களே! மானிட சுயேச்சையின் அன்பளிப்பு, உடலுக்கும் உயிருக்கும் ஜீவனளிக்கும் நன்கொடை, வெற்றியின் சின்னமெனவிளங்கியவரின் ஜனன விழாக்களைக் கொண்டாடி சந்தோஷமடைய உங்களுக்கு வெட்கமில்லையா?

தெய்வமே! மறதிசிருஷ்டிக்கும் வியப்பூட்டும் நிலைமையையும், கால மாறுதலின் ஆச்சரியமானவிளைவையும் என்னவென்று கூறுவது; ஆண்டவனைத் தவிர மற்றவர்களின் அடிமைத்தளைகளால் கால்கள் கட்டுண்டு கிடக்க-மானிடரின் ஆட்சியும் அவர்களைத் திருப்திப்படுத்தும் எண்ணமும் இதயங்களை ஆட்கொண்டிருக்க; -தெய்வநம்பிக்கையில்லாது உள்ளங்கள் சூன்யமாயிருக்க - சத்தியமும், நேர்மையுமான கருமங்களுண்டாக்கும் ஒளி, ஆத்மாக்களுக்குக் கிடைக்காது ஜீவனே இருண்டிருக்க-இத்தகைய நிலைமையில் நீங்கள் ரபிஉல் அவ்வல் மாதத்தில் தோன்றியவரின் விழாவைக் கொண்டாட முற்பட்டிருக்கிறீர்கள். அவர் தோற்றம் இறைவனின் தெய்வீகத்தன்மையின் வெற்றி உலகசக்திகளின் தோல்வி; சத்தியசுதந்தரபிரகடனம்; நியாயமும் நேர்மையும் அடையும் ஆதிபத்தியம்; நேர்மையை நிலைநாட்டும் சமுதாயத்தின் வளர்ச்சி முதலியவற்றின் ஸ்ரீ முகம் என்பதை நீங்கள் அறியவில்லையா?

மறதியில் சிக்குண்டு கிடக்கும் சமூகத்தினரே! உங்கள் மறதியைமுன்னிட்டு அளவிலா துயரம் உண்டாகிறது. நீங்கள் இம்மாதத்தின் உண்மைப்பெருமையையறியாது, வீடுகளை அலங்கரிப்பதும். தீபாலங்காரத்திலும், அதன் நோக்கத்திலும் ஞாபகார்த்தத்தை புறக்கணிக்க விரும்புவீர்களாயின்; இஸ்லாமிய சமுதாய அஸ்திவாரத்தின் ஆரம்ப கட்டமும், தெய்வீக ஆட்சி ஸ்தாபிக்கப்பட்ட முதல் பிரகடனமும், உலக ஆட்சியெனும் தெய்வீக அன்பளிப்பின் முதல்மாதமுமாகும். இதுஎன்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள் நாயகம் முஹம்மத் முஸ்தபா அவர்கள் போதித்த உண்மைகளைப் புறக்கணித்தவர்களுக்கு - இம்மாதத்தின் வருகையால் ஆனந்தம் கொள்வது; அவரை நினைத்து அன்பு கொண்டு சந்தோஷப் படுவது (கூடாததாகும்) நிந்தனை செயல் முதலியவற்றால் தெய்வீக பிரகடனத்தை உறுதிப்படுத்ாதவர்களும் நபி நாயகமவர்கள் காட்டிச்சென்ற நல்லொழுக்கங்கள்படி நடவாதவரும் இம்மாதத்தில் ஜனனவிழாக்களைக்கொண்டாடுவதும், துருத்நாதர் அஹ்மத்முஜ்தபாவின் புகழ் பாடுவதும் ஒவ்வாது என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

செய்திகள்.

கும்பகோணத்தில் அநியாயம்.

நாடு சுதந்திரமடைந்தும் மக்கள் இன்னும் தம் பொறுப்பை உணராதுநடந்து கொள்ளுகின்றனர். நாம் இருக்கும் பிராந்தியத்தில் அசிங்கம் அதிகரித்தால் அதிலிருந்து ஏற்படும் வியாதிகளுக்கு நாமே பலியாகிறோம், என்றும் நாம் உணருவதில்லை. கும்பகோணம் முனிசிபாலிடி எல்லைக்குள் இருக்கும் திடல்கள், சாக்கடை சந்துகள் ஏன் தெருக்களில்கூட பிள்ளைகள், முதியோர்கள், ஆண், பெண் சகஜமாக உட்கார்ந்து மலஜலம் கழிப்பதைப் பார்க்க சகிக்கவில்லை. இன்று காலரா பரவி பல இடங்களில் உயிர்ச்சேதம் ஏற்படுகிறதென்றால் இந்த அநாகரீக செய்கையும் அதற்குக் காரணம் என்றும் நினைக்கவேண்டும். கும்பகோண அதிகாரிகளும் நகராட்சி மன்றத்தலைவரும் ஏனைய மெம்பர்களும் இதை உடனே கவனித்து நம் நாட்டுக்கே இழுக்காக இருக்கும் இந்த வழக்கத்தை மக்கள் விட்டொழிக்கும்படி தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த சீர்திருத்தத்தில் எவ்வளவு சிலவு ஆனாலும் சகிக்கவேண்டும். சுதந்திர இந்தியாவில் அதிகரித்து இருக்கும் வேலைகளில் இதையும் ஒரு வேலையாகக் கருதி இதற்கு என்று ஒரு தனி அதிகாரியை நியமித்தோ அல்லது நகரசுத்திஸ்தாபனத்துக்கே மேலும் சலுகை காட்டியோ இவ்வேலையை தீவிரமாக செய்யும்படி தூண்டவேண்டும், என்று கேட்டுக்கொள்கின்றோம்.

மேலப்பாளையம் 19—12—50:—

திருநெல்வேலிஜில்லா மேலப்பாளையம் முனிசிபல் கவுன்ஸிலின் 19—12—50ல் நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் அடியிற் கண்ட தீர்மானம் சேர்மேன் V. S. T. முகம்மதுஇப்ருகிம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாய் யாவரும் நின்று கொண்டு நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்

இந்த கூட்டம் 15—12—50ல் இந்திய உதவிப் பிரதம மந்திரி சந்தார் வல்லபாய்படேல் அமரத்வம் அடைந்ததற்கு ஆழ்ந்த துக்கத்தை தெரிவித்துகொள்கிறது

இந்த தீர்மானத்தை இந்திய அரசாங்கத்திற்கும் சந்தாரின் குடுபத்தினருக்கும் தந்திமூலம் அறிவிக்கும்படி முனிசிபல் கமிஷ்னரை கேட்டுக்கொள்கிறது.

(Sd) V. S. T. **முகம்மது இப்ருகிம்**
சேர்மேன்,
மேலப்பாளயம் முனிசிபாலிடி.

மகா-ா-ஸ்ரீ கனம் ஜில்லா கலெக்டர் அவர்கள் சமுகத்திற்கு,

மேலப்பாளையம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சார்பாக கீழவீரராகவபுரம் மேலப்பாளையம் கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் சங்கத்தார் வணக்கமுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பம் யாதெனில்:—

4-1-51 மேலப்பாளையத்தில் வசிக்கும் பெரும்பான்மையான முஸ்லிம்களும், இந்துக்களும் நெசவுத்தொழிலையே ஜீவாதாரமாகக் கொண்டவர்கள். வேறுயாதொரு விதமான கைத்தொழிலையும் அறியாதவர்கள். இந்நகரத்தில் சுமார் 8 ஆயிரம் கைத்தறிகள் உள்ளது. தற்சமயம் ஏற்பட்டுள்ள நூல் நெருக்கடியின் காரணமாக இங்குள்ள நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, வேறு வழியின்றி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு, வாழ வழியின்றி நிர்க்கதியாய் இருப்பதால், கனம் கலெக்டர் அவர்கள் ஏழை நெசவாளிகள்மீது கிருபை கூர்ந்து நெசவாளர்களின் பஞ்சப் பிணியைப் போக்க போதுமான அளவு நூல் கிடைக்க வசதி செய்வதுடன் அவர்களின் வாழ்வும் வளம்பெற வகையான திட்டம் வகுக்க வேண்டுகிறோம். மேலும், தற்சமயம் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளின் மூலமாக, நூல் எடுத்து நெசவுத் தொழில் புரியும் நெசவாளர்களுக்கும் வினியோகிக்கப்படும் நூல் அவர்கள் வாழ்க்கைக்குப் போதுமான அளவாக இல்லாததால், அவர்களுக்கும் அதிக நூல் கிடைக்க வழிசெய்யவும் வணக்கமுடன் வேண்டிக் கொள்கிறோம்.

எங்கள் நகரில் ரேஷன் இருப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதால், ரேஷனையும் எங்கள் நகரில் எடுத்து விட வேண்டுகிறோம்.

—ப. செ. முகம்மதுயூசுபு,
தலைவர்,
நெசவாளர் கைத்தறி காங்கிரஸ் சங்கம்,
கீழவீரராகவபுரம் மேலப்பாளையம்.

* * *

தாம்பிரவரணி நதியில் மேலநத்தம் பக்கத்தில் ஒரு பாலம் கட்டுவதென நெல்லை ஜில்லா போர்டு தீர்மானம்:

21—12—'50 பகல் 2-30 மணிக்கு திருநெல்வேலி ஜில்லா போர்டு கூட்டம், தலைவர் ஸ்ரீமான் D. S. ஆதிமூலம் அவர்கள் தலைமையில் ஜில்லா போர்டு ஆபிஸில் வைத்து நடைபெற்றது. ஜில்லா போர்டு மெம்பர் ஜனாப் V. S. T. முகம்மது இபுறுகீம் அவர்களால் தாம்பிரவரணி ஆற்றில் மேலநத்தம் கருப்பன் துரைக்கு மத்தியில் ஒரு பாலம் அவசியம் கட்டவேண்டுமென்றும் திருநெல்வேலி ஜங்ஷன் பக்கம் சுலோச்சன முதலியார் பாலம் இந்த ஜில்லாவிலுள்ள போக்குவரவு சாதனங்களுக்கும், பாதசாரி போக்கு வரவு ஜனங்களுக்கும் ஒரே பாலமாக இருப்பதால், மிகவும் போக்குவரத்து கஷ்டம் ஏற்படுவதாலும், திருநெல்வேலி ஜங்ஷன் (லெவல் கிராஸ்) ரெயில்வே கேட் அடிக்கடி அடைக்கப்படுவதால் ஜங்ஷனிலுள்ள வியாபாரிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் பெரும் இடைஞ்சல் ஏற்படுவதாலும் மதுரையிலிருந்து கன்னியகுமரிவரை போகும் மெயின் ரோட்டில் தாம்பிரவரணி நதியில் இந்த ஒரு பாலம் தவிர வேறு பாலம் இல்லாததினாலும் ஷை பாலத்தில் போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மேலும் ஷை பாலம்கட்டி 100 வருஷங்களுக்கு மேலாகிறது. அதனால் போக்குவரத்து நெருக்கடியை குறைக்கவும், ஷை பாலத்திற்கு பாதுகாப்பு அளிக்கவேண்டிய முக்கியத்துவம் அவசியம் ஏற்படுவதால், மற்றொரு பாலம் மேலநத்தத்திற்கும், கருப்பன்துரைக்கும் மத்தியில் தாம்பிரவரணி நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டியது அத்யாவசியமாக இருக்கிறது என்ற தீர்மானத்தை, ஜனாப் V. S T. முகமமது இபுறுகீம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஷை பாலம் கட்ட வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து ஷை பாலம் கட்டுவதென்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேறிற்று.

அன்புள்ள,
முத்துசாமி
அஸிஸ்டெண்டு காரியதரிசி, மேலநத்தம்.

* * *

நகர காங்கிரஸ்கமிட்டி மேலப்பாளையம்

மேலப்பாளையம் நகர காங்கிரஸ் கமிட்டி வேண்டுகோளுக்கு இணங்கி மேலப்பாளையம் முனிஸிபல் ஏரியாவுக்குள்ள ஹிந்து, முஸ்லிம் சகோதரர்கள் யாவரும் எல்லாக்கடைகளை மூடியும், நெசவாளர்கள் நெசவுத் தொழில்களை நிறுத்தியும் பூரணஹர்த்தால் அனுஷ்டித்தார்கள். இன்று மாலை 4-மணிக்கு மேலப்பாளையம் நகர காங்கிரஸ் காரியாலயமான கனம் தமுஸ்தாசீன் அவர்கள் பங்களாவிலிருந்து ஏராளமான முஸ்லிம்களும், ஹிந்துக்களும் கொண்ட ஒரு மௌன ஊர்வலம் புறப்பட்டு, மேலப்பாளையம் பஜார் வழியாய் குறிச்சி வாய்க்கால் பக்கத்திலுள்ள காந்திசவுக்கத்தில் முடிவடைந்தது. ஷை கூட்ட முடிவில் ஐக்கிய இந்தியாவின் தளபதி சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் மகிமையைப் பற்றியும், தேசசேவையைப் பற்றியும் மேலப்பாளையம் டவுண் காங்கிரஸ் கமிட்டி பிரசிடெண்ட் ஜனாப் V.S.T; ஷேக்மன்சூர் சாஹிப், Ex, M. L. A. இவர்களும், எழுச்சிமுரசு ஆசிரியர் A. D. அரசு அவர்களும், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி மெம்பரும், மேலப்பாளையம் முனிஸிபல் சேர்மனுமான கனம் V. S T. முகம்மது இபுறாஹிம் அவர்களும் சொற்பொழி வாற்றினர்கள். மேன்மை தங்கிய பட்டேல் அவர்களின் ஆத்மா சாந்தி யடைய வேண்டி சம்பிரதாயப்படி கூட்டத்தில் எல்லோரும் எழுந்து நின்று டவுண் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி M R. உலகநாதன் அவர்களும் பகவானிடத்தில் பிரார்த்தித்து, மாலை 6-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

வணக்கம். M R. உலகநாதன்,
16—12—51, காரியதரிசி.

மேலப்பாளையம் நகரசபையின் சார்பில் 2-12-50 தேதி காலை 10-மணிக்கு மேற்கு வங்காள மாகாணம் சட்டம் நீதி மந்திரியும், மலைஜாதியினர், பிற்பட்ட வகுப்பினரின் விசேஷ மந்திரியுமான கனம் ஸ்ரீ நிகரன்புடட் மசும்தார் பார்-அட்-லா அவர்களுக்கு ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

நகர சபைத்தலைவர் ஜனுப் V. S T. முகம்மது இபுருஹிம் அவர்கள் நகரசபை சார்பில் உபசாரப்பத்திரம் வாசித்தளித்தார்கள். நகரசபைத் தலைவர் அவர்களால் நகரசபைக்கு நன்கொடையாக அளித்த 'சுதந்திரத்தை மஹாத்மா காந்திஜீ'' அவர்களின் திரு உருவப்படத்தை நகரசபை கவுன்ஸில் ஹாலில் திறந்து வைக்கும்படி கனம்மந்திரி அவர்களை நகரசபைத்தலைவர் அவர்கள் வேண்டிக்கொண்டதற்கிணங்க கனம் மந்திரி அவர்கள் பலத்தகரகோஷத்தினூடே, அண்ணல் அவர்களின் உருவப் படத்தை மிகவும் உருக்கமாகத் திறந்து வைத்தார்கள்.

மஹாத்மா அவர்கள் தேசீயகாங்கிரஸிற்கும், தாய் நாட்டின் விடுதலைக்காகவும், ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் செய்துள்ள மாபெரும் தியாகங்களைப் பற்றியும் அவர்களைப் பின்பற்றி நமது தலைவர்களான நேருஜி, சர்தார் படேல் போன்றவர்கள் செய்துள்ள, செய்துவருகிற மகத்தான பணிகளைப்பற்றியும் விரிவாக சொற்பொழிவாற்றி, எல்லோரும் இந்தியர்கள்—இந்நாட்டு மக்கள் என்ற மனப்பாண்மையில் ஹிந்து—முஸ்லிம் என்ற வேற்றுமையின்றி எல்லோரும் ஒற்றுமையாக இருந்து சுதந்திர இந்தியாவைக் காப்பாற்றவும், மந்திரி வேண்டினார்.

நகரசபை வரவேற்பிற்குப் பதிலளித்துப் பேசுகையில், நகரத்தில் இருக்கும் குறைகளை நீக்கவும், குறிப்பாக நகரமக்களாகிய நெசவாளர்களின் குறைகளை நீக்க நகரத்தில் இருக்கும் 8,000 தறிகளுக்கும் போதுமான நூல் கிடைப்பதற்கு, மாகாண மத்திய அரசாங்கத்தாருக்கு எடுத்துச்சொல்லி, தன்னாலான எல்லா உதவிகளும் செய்வதாக வாக்களித்தார்கள்.

தனக்களித்த வரவேற்பிற்கு, நகர மக்களுக்கு தனது சார்பிலேயும், தன் சகாக்கள் சார்பிலேயும் நன்றி கூறினார்கள். நகரசபைத் தலைவர் அவர்களால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

இங்கனம்,
V. S. T. முஹமது இப்ருகிம்,
சேர்மேன், முன்சிபல் கவுன்சிலர்,
மேலப்பாளையம்.

* * *

புத்தாண்டு வாழ்த்து.

"**ஆஸாத்**" தனது ஆதரவாளர்கள், நேயர்கள், சுதந்தர இந்திய மக்கள் அனைவருக்கும், மங்களகரமான பொங்கல், புத்தாண்டு, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாண்டு இந்திய மக்களின், முன்னேற்றத்திற்கும், சுக வாழ்வுக்கும் வகையாயமைய வேண்டுமென சர்வ வல்லமை பொருந்திய இறைவனைப் பிரார்த்திக்கிறது. வாழ்க! சுதந்தர பாரத நாடு. வாழ்க! பாரத மக்கள் வாழ்க!!

அந்தோ மறைந்தார் ஸர்தார்!

(ஷேக்பீர், கல்லிடைக்குரிச்சி)

இந்தியத்தாய் ஈன்றதவப் புதல்வர் தம்முள்
இரும்பிதயம் கொண்டவனாய் இலங்கி நின்றாய்!
இந்தியாவின் விடுதலைக்கு எம்மான் காந்திக்
கிணையற்ற துணையாகி இன்ன லுற்றாய்!
இந்தியத்தாய் சுதந்திரத்தை ஏற்ற பின்னர்
ஈண்டுதவிப் பிரதமராய் இரும்பூ தெய்த
இந்தியாவில் பலஅரசாய் இயங்கி வந்த
இராஜ்ஜியங்க ளத்தனையும் இணையச் செய்தாய்!

இந்நாட்டு உள்நாட்டு இலாக்கா வுக்கே
இறைவனானைப் படைத்தனனே என்னு மாறு
இந்நாட்டின் நலனொன்றே இலக்காய்க் கொண்டு
எழிற்றலைவன் நேருவுடன் இணைந்து நின்று
இந்நாட்டுக குற்றஇன்னல் எழிதாய் நீங்கி
இவ்வுலகம் போற்றநின்ற வந்த லேநீ!
இந்நாட்டு மக்களெல்லாம் ஏங்கி நிற்க
ஏகனடி ஏகினையே ஏது செய்வோம்!

உன்குருவாம் காந்திஜீ உனைய ழைத்து
உத்தரவு செய்தனரோ? உழுவ லாக
உன்னுள்ளம் மகாத்மாவின் உறைவி டத்தை
உறைவிடமாய் நாடியதோ? உண்மை யாதோ?
பொன்னகரும் உன்பணியால் பொலிவுற் றோங்க,
புகுந்தனையோ? புகழ்மிக்கப் புனித னேய்!
கன்மனமோ இந்தியர்கள் கசிந்து வாடக்
கைவிட்டு விலகினையே கருத்து ஏனோ!

எதிர்க்கட்சிக் கேற்றபதில் இனியார் சொல்வார்!
எம்ஜவஹர்க் குற்றதுணை யாரே அம்ம!
அதிர்ச்சிதரும் போர்மேகம் அண்டை நாட்டில்
அடுத்திருக்கத் தடுக்க உன்போல் ஆரே ஆவர்!
மதிப்பிற்கு உரியதந்தை மகாத்மா காந்தி
மறைவினாலே மனமுடைந்து மயங்கி நிற்கும்
கதியிலேயே இந்தியரைத் தயங்க விட்டாய்!
ஸர்தாரே ஈதுனக்குத் தகுதி யாமோ!

பொங்கல் வாழ்த்து.

"சிற்பி"

பொங்கற் புதுநாள் வந்தது—எங்கும்
மங்கள வாழ்வு தந்தது—வானில்
தங்க ஒளிவீசி ஞாயிறு—ஊதும்
சங்கஒலி கேட்டு வருகிறது.

விண்ணில் புகைகள் எழுந்தன — உடன்
மண்ணவர் ஓலம் நிறைந்தது — எங்கும்
எண்ணரும் தொகையினர் ஆழவே — பாடி
பண்ணவர் பாதம் பரவினர்.

வாழி ஜவஹர்லால் என்றுமே — இன்று
தோழியர் பல்லாண்டு பாடினர் — நாமும்
வாழியவர் தம் தலைமையில் — என்றும்
வாழ்ந்து நலம்பெற வாழ்த்துவோம்.

ஆசைத் தை திங்களினல் — நம்
ஆஸாத் அன்பர் தமக்கு — நாங்கள்
பாசமுடன் அளித்திட்ட — எங்கள்
நேச வாழ்த்து உறித்து.

தந்தி விலாசம்:— "கோகுல்" ஸ்தாபிதம் 1909 டெலிபோன் நெ 57

டி.எஸ்.ஆர்.அண்.கோ.

கும்பகோணம்.

பிராஞ்சு:— மதராஸ் & மன்னார்குடி.

சந்தனாதித்தைலம், அரைக்கீரை விதைத்தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள், பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, வாசனைப்பாக்கு, வாசனை சுண்ணாம்பு, அரகஜா முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

பீடி சக்கரவர்த்தி

RAMSAIT BEEDI

த.பி.சொக்கலால்

ராம்சேட் பீடி

முக்கூடல்

த.பி.சொக்கலால் ராம்சேட் பீடி முக்கூடல்

Printed by V. Jayaram at his Sri Rama (Power) Printing Works, 38, Sarangapani East Vadamboki St, Kmu

Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South, Kumbakonam.